www.padippakam.com

# மக்கள் பண்பாடு

எப்-அக். 1996

நன்கொடை ரூ. 6.00




படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பண்பாடு

மக்கள் பண்பாட்டுப்
பேரவை இதழ்

1 — 2

ஆண்டு கட்டணம் ரூ. 25/-

ஆசிரியர்
செந்தாரகை

படைப்புகள், நன்கொடைக்கான
தொடர்பு முகவரி:

நடராசன்,

4/86 B அம்மன் தெரு,
தெற்கு மலையம்பாக்கம்,
குன்றத்தூர்,
சென்னை - 600 069.

அச்சு: அலைகள் அச்சகம்
சென்னை - 24

## உள்ளே

| | பக்கம் |
|---|---|
| தலையங்கம் | 1 |
| மாநாட்டு கவிதை | 5 |
| எழுச்சிமிகு AILRC மாநாடு | 7 |
| உலக அழகிப் போட்டி | 11 |
| வரவர ராவ் கட்டுரை | 17 |
| கோ. கேசவன் சிறப்புரை | 22 |
| தோழர் அரிராமன் | 33 |
| புயல் - தெலுங்கு சிறுகதை அல்லம் ராஜய்யா | 35 |
| மக்கள் கலை மன்ற பாடல் | 56 |
| பறை முழக்கம் | 57 |

முகப்பு ஓவியம் : ஓவியர் ஹரி

தன் உண்மையான சாரத்தை உணராத மனிதரா லும், அல்லது தனது உண்மை யான சாரத்தை இழந்த மனிதரா லும் உணரப்படும் உலகப் பார் வையே மத உணர்வாக வெளிப்படுகிறது. இத்தகைய மனப்பாங்கு, இத்தகைய சமூக நிலை, மதத்தை உருவாக்குகி றது. இது தலைகீழாக உணரப்ப டும் உலகத்தின், தலைகீழான உலகப் பார்வையாகும்.

☆ காரல் மார்க்ஸ்

www.padippakam.com

தலையங்கம்

# ஆபாச எதிர்ப்பு இயக்கமும் ஆண் ஆதிக்கச் சட்டமன்றமும்

தமிழ்நாடு வரலாற்றில் தடம் பதிக்கும் செயலை தமிழ் நாடு பெண்ணுரிமைக் கழகத்தின் பெண் போராளிகள் 26-8-96 அன்று செய்து உள்ளனர். சட்டமன்றத்தில் துண்டறிக்கைகளை வீசி, ஆபாச எதிர்ப்பு போர் முழக்கமிட்டதானது இன்றைய சூழலில் செயற்கரிய சிறந்த செயலாகும். பண்பாட்டுப் போராளி களுக்கும், பெண்ணுரிமை வீரர்களுக்கும், சனநாயக சக்திகளுக் கும், பாட்டாளிய தோழர்களுக்கும் இப்போராட்டம் உத்வேகத் தையும், உற்சாகத்தையும் ஊட்டி புதிய இரத்தத்தைப் பாய்ச்சி உள்ளது. ஆண் ஆதிக்க சட்டமன்றமும், பண்பாட்டுப் சீரழிவு வியாபாரிகளும் ஓட்டுக்கட்சிகளும் ஒரு கணம் அதிர்ந்து உறைந்து போயினர்! கருணாநிதி ஆட்சியை எதிர்த்த முதல் போராட்டம் சரியான இலக்கை நோக்கிய அம்பாக புறப்பட்டு சென்று தாக்கியுள்ளது!!

## ஏன் இந்த போராட்டம்?

சமூகத்தில் சரிபாதியாக உள்ள பெண்கள் இன்று நுகர்வுப் பண்டமாகவும், காட்சிப் பொருளாகவும் மாற்றப்பட்டு வருகின் றனர். 'இலாபம்' ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மேலை நாட்டு ஆபாச— அராஜகப் பண்பாட்டை போட்டிப் போட்டு கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் (MNC) நம்நாடு முழுவதும் பரப்பி வருகின்றன. முன் எப்பொழுதும் இல்லாத அளவில் கடந்த 10 ஆண்டுகளாக திரையரங்குகளில் நீலப் படங்களைத் திரையிடு வது பெருநகரங்களில் மட்டுமல்லாமல் சிற்றூர்களிலும் பல்கிப் பெருகி உள்ளன. அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட வக்கிர மான ஆபாச இதழ்களும், சுவரொட்டிகளும் திரும்பும் இட மெல்லாம் கண்களை முள்ளாய் உறுத்துகின்றன. நகரங்களில் காபரேக்களும், கிராமங்களில் நிர்வாண ரிக்கார்ட் டான்சுகளும் அதிகரித்துள்ளன. அழகிப் போட்டிகள், மாடலிங் என்று அரை நிர்வாண ஆபாசக் காட்சிகள் நாளும், நச்சாய் பரப்பப்படுகின் றன. இவைகள் உழைக்கும் மக்களின் பண்பாட்டைச் சீரழிப்ப துடன், பெண்களை அடிமைப்படுத்தி, இளைஞர்களை காய டித்து, மக்களை மிருகமாக்குகின்றன. சமூக, பொருளியல் நெருக

கடியின் விளைவாக எழும் மக்கள் போராட்டங்களை திசை திருப்புகின்றன. அரசின் பல்வேறு துறைகளும், குறிப்பாக போலீஸ் அதிகாரிகளும, ஓட்டுக் கட்சி தலைவர்களும் சட்ட விரோதமான இச்செயல்களுக்கு லஞ்சம் வாங்கிக் கொண்டு ஒத்துழைக்கின்றனர். அவர்களே பங்காளிகளாக இருந்தும் இந்த நாசகாரத் திருப்பணிகளைச் செய்கின்றனர்.மக்கள் பண்பாட்டுப் பேரவை, த. பெ. க, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக்கழகம் எனப் பல இயக்கங்கள் ஆபாசத்தை ஒழிக்கப் போராடி வருகின்றன.

இருப்பினும், கடந்து போன 'பெண்' முதல்வர் ஆட்சியிலும, 'தமிழ்ப் பண்பாட்டை' காக்க அவதாரம் எடுத்துள்ள ''தமிழினத் தலைவர்'' கருணாநிதியின் ஆட்சியிலும் சரி எந்த உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இதைக் கண்டிக்கும் விதத்திலும், சட்டமன்றத்தின் செவிட்டுக் காதில் உறைக்கும் படியாகவும் த. பெ. க. வின் பெண்கள் சட்டமன்றத்திற்குள் ஆபாச எதிர்ப்புப் போர்முழக்கத்தை எழுப்பி துண்டறிக்கைகளை வீசினர். 'சனநாயக' நாட்டில் இவையெல்லாம் சாதாரண எதிர்ப்பு போராட்ட வடிவம் தான்!

**யாருடைய பக்கம் இந்தச் சட்டமன்றம்?**

பெண்களின் வீரமிக்க இப்போராட்டத்தை நேர்மறையாக எடுத்துக் கொண்டு ஆபாசத்தை ஒழிப்பது பற்றி விவாதிக்க வில்லை. மாறாக சட்டசபை தன்னை மட்ட சபையாகத் தாழ்த்திக் கொண்டது. அவர்களுக்கு 2 நாள்கள் சிறைதண்டனை அளித்தது. அத்துடன் காவல்துறையை ஏவி விட்டு, சிறைவாச லிலே மீண்டும் பெண்களை மதியம் கைது செய்தது. அன்று மாலை 5 மணிக்கு அந்த எட்டு பெண்களும் சாலை மறியலில் ஈடுபட்டதாக பச்சையாக பொய் குற்றச்சாட்டைக் கூறி வேலூர் சிறையில் அடைத்தது. குற்றமுறு சதி, அரசாங்க ஊழியரை பணி செய்வதைத் தடுத்தல், ''ப்ளேடு'' போன்ற கொடிய ஆயுதங்களை வைத்திருத்தல், அரசு சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல் என்று 6 சட்டபிரிவுகளில் உளவுத்துறையினர் வழக்கைப் போட்டனர். மாலை 6 மணிக்கு மேல் பெண்களை காவல் நிலையத்திற்குள் வைக்கக் கூடாது என்ற கருணாநிதியின் ஆணை அவரின் மூலமாகவே முதல் சட்டமன்ற தொடர் முடியும் முன்பே மீறப்பட்டது. இரவு 10 மணிவரை தலைநகரிலே காவல் நிலையத்திற்குள் சிறை வைத்து சட்டத்தை மீறினர். பெண்களை அடித்து கேவலமாகத் திட்டி, சித்ரவதை செய்து, கிரிமினல்கள் போல

www.padippakam.com



கைரேகைகளையும், போட்டோக்களையும் எடுத்து சட்டத்திற்குப் புறம்பாக எல்லாச் செயல்களையும் காவல்துறையினர் வழக்கம் போல 'திறமை' யாகச் செய்தனர்.

மனுநீதிச் சோழனின் கன்றை கொன்றதற்காகக் பசு ஆராய்ச்சி மணியை அடித்தவுடன் குற்றம் செய்த தனது மகனேயே தேர்க்காலில் இட்டுக் கொன்று நீதி வழங்கினான். கருணாநிதி சோழன் ஆட்சியின் நீதியே வேறு! ஆராய்ச்சி மணியை அடித்ததே குற்றம் என்று பசுவை கசாப்புக் கடைக்கு அனுப்பி நீதி வழங்குவார். ஆராய்ச்சி மணியையே கழட்டி விடுவார்கள். அல்லது அடிக்காமல் செய்து விடுவார்கள். த.பெ க. நீதி கேட்டதற்கு கருணாநிதி இதைத்தான் செய்துள்ளார். போலீசார் கையைக் கடித்தனர். கர்ப்பிணியான பெண் காவலரை தள்ளினர் பிளேடு என்ற கொடிய ஆயுதம் வைத்திருந்தனர் என்றும், தீவிர வாத அமைப்பினர் அனுப்பினர் என்றும், வேசம் போடுகின்றனர் என்றும் கோயபல்ஸ் பிரச்சாரத்தைச் சட்டமன்றம் செய்தது.

அத்துடன் பேராசிரியர் அடைமொழி அன்பழகன் ''எல்லோருக்கும் கையெழுத்து போட்டு கொடுத்து இது போன்ற செயல்கள் நடக்க இது சத்திரமல்ல'' என்று திருவாய் மலர்ந்து உண்மையான ஒப்பதல் வாக்குமூலம் அளித்துள்ளார். காலுக்குச் செருப்பாய் இருப்பேன் என்றும், கூழை கும்பிடு போட்டு காலில் விழுந்து ஓட்டு வாங்கியும் ஆட்சிக்கு வந்த இவர்கள் மக்கள் சட்டசபைக்கு வரக்கூடாது என்று ஊளையிடுகின்றனர். ஓட்டும் பொறுக்கிகள் அகராதியில் சாராய உடையாரும், சன் டி.வி. ஆபாச வியாபாரியும்தான் சட்டமன்றத்திற்கு வர வேண்டுமா? இவ்வாறு அன்பழகன் பேசியதை கேட்டு சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளின், கலர் கலராய் 'முற்போக்கு' 'ஜனநாயகம்' என்று கூவிய கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் வாய்மூடி இருந்தனர். ஒரு மக்கள் பிரதிநிதி கூட அன்பழகன் பேச்சைக் கண்டிக்கவில்லை, சனநாயகத்தைக் காப்பாற்றத் துடிப்பதாக வேசம் போடும் எந்த முதலாளிய இதழ்களுக்கும் இதைப் பற்றி சுரணையே இல்லாமல் இருக்கின்றன.

ஆபாசத்தை எதிர்த்த பெண்களுக்கு தண்டனைக் கொடுத்த போது ஒரு பெண் எம்.எல்.ஏ. கூட அதை எதிர்த்து குரல் கொடுக்கவில்லை. சி.பி.எம்., சி.பி.ஐ. மகளிர் அணி எம். எல்.ஏக்கள் உள்பட அனைவரும் காந்தி குரங்கு பொம்மைகளாய் தான் இருந்தனர். பெண்களாய் இருப்பவர்கள் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராய் குரல் கொடுப்பார்கள் என்ற பெண்நிலை 'வாதம் 'ஏனோ இங்கு கரைந்து போனது.

ஆண் ஆதிக்க, சீரழிவு பண்பாட்டின் சின்னமான சட்டமன்றத் தின் மௌனச் சாட்சியாய் பெண் எம்.எல்.ஏ.க்கள் இருக்கின்ற னர். ஆண் எம்எல்ஏக்களும், அமைச்சர்களும் ''ஸ்டெப்னி. பெண் காவலர்கள் வேண்டிய அளவு அலங்கரிக்கப்படுவார்கள்'' என்று இரு பொருள்பட பெண்களை கொச்சையாக இழிவுபடுத்தி சட்டமன்றத்தில் விவாதம் என்ற பெயரில் ஆபாசமாக பேசு வதை அங்கீகரித்தவர்களான இந்த பெண் எம்.எல்.ஏ.க்களுக்கு ஆபாசத்தைபற்றி எப்படி பேசுவார்கள். இவ்வாறு த.பெ க.வினர் போராட்டத்தில் ஒட்டுமொத்தமாக சட்டமன்றம் அம்பலப்பட்டு போய்விட்டது.

## கூட்டு அமைப்பை கட்டி எழுப்புவோம்

ஆபாசத்தை எதிர்த்து முழக்கமிட்டதில் சட்டமன்றம் அவ மதிக்கப்பட்டு விட்டதாம்! ஆனால்,ஜெயலலிதாவின் சேலையைப் பிடித்து திமுக தலைவர்கள் இழுத்தபோது சட்டமன்றத்தின் மரியாதை எங்கே போனது? மேசைகளை, மைக்குகளை பிடிங்கி அடித்துக்கொண்டு ஆண்டுக்கு ஒரு தடவையாவது அரை அம்மண மாய் கலாட்டா செய்யும் போது சட்டமன்றத்தின் அமைதி என்னவாயிற்று?பொதுச் சொத்தைச்சட்டமன்றத்திலேயே நாசப் படுத்தி எம்.எல்.ஏ.க்கள் மீது காவல்துறையினர் கிரிமினல் வழக்கு போட்டதுண்டா? இப்படி எல்லாம் மக்கள் சிந்திக்க மாட்டார் கள் என்று கருணாநிதி அரசாங்கம் கனவு காண வேண்டாம். மக்களை மதிக்காத, ஊழல் பெருச்சாளியாய் திரிந்த பாசிச வெறி பிடித்த அதிமுக ஆட்சிக்கு இப்படி மரணதண்டனை அளிப்பார்கள் என்று எந்த ஓட்டுக் கட்சி தலைவர்கள் கனவு கண்டு இருப்பார்கள்? மக்கள் தங்களுக்கு கிடைத்த குறைந்தபட்ச வாய்ப்பான தேர்தலிலேயே அதிமுகவிற்கு படுதோல்வியை தந்த னர். கருணாநிதி இதை 6 மாதத்திலேயே மறந்துவிட்டார். ஆனால் மக்கள் மறக்க மாட்டார்கள். துரோகிகளுக்கு உரிய தண்டனையை மக்கள் அளித்தே தீருவார்கள்.

அமெரிக்காவின் டூபாண்ட் கம்பெனியை எதிர்த்து மக்க ளிடம் ஓட்டு வாங்கிக் கொண்ட கருணாநிதி, இன்று அந்த நாச கார கம்பெனிக்கு பாய்விரிக்கிறார். ஏகாதிபத்திய கம்பெனிக ளுக்கு சலுகைகளை வாரி அளித்து தமிழ்நாட்டிற்கு அழைக்கி கிறார். ஜெயலலிதாவை எதிர்ப்பதாக காட்டிக் கொண்டாலும், அவரின் ஏகாதிபத்தியச் சார்புக் கொள்கையை கருணாநிதி இன்னும் வேகமாகவே நடைமுறைப் படுத்துகிறார்.டூபாண்ட்டை எதிர்த்து ஊர்வலமாக சென்று மனு கொடுக்கக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஏகாதிபத்திய அடிவருடியான

www.padippakam.com



கருணாநிதி ஏகாதிபத்திய ஆபாசப் பண்பாட்டை ஒழிக்கமாட்டார். கபட வேடதாரி கருணாநிதி ஆட்சியில் ஆபாசம் இன்னும் அதிகமாகும். பெண்களுக்கு எதிரான அநீதிகள் அதிகரிக்கும். இவற்றை முறியடிக்க ஒன்றுபட்ட மக்களின் ஆபாச எதிர்ப்பு இயக்கத்தின் சக்தியாலேயே முடியும். அப்படிப்பட்ட கூட்டு அமைப்பை பஉருவாக்க பெண்விடுதலை இயக்கங்களும், கலை, இலக்கிய, பண்பாட்டு இயக்கங்களும், சனநாயக சக்திகளும் முன் முயற்சி செய்யவேண்டும். பரந்துபட்ட வீரமிக்க மக்கள் சக்தியை தட்டி எழுப்பி ஆபாசத்தை தமிழக மண்ணிலிருந்து வேரோடு கிள்ளி எறிய வேண்டும். இது காலத்தின் அறைகூவலாகும்.

ஆசிரியர் குழு

---

# அ. இ. பு. ப.இயக்கக் கவியரங்கக் கவிதை

துரை. சண்முகம் (ம.க.இ.க)

பீளை தள்ளிய விழிகளை
பிடுங்கி எறிந்துவிட்டு
சோடியம் விளக்குகளால்
ஜோடிக்கிறார்கள் நகரத்தை

எழில்மிகு சென்னை இரண்டாயிரமாம்
இங்கே அருவருப்பான இந்தியாவை
அடையாளம் காட்ட அழைக்கிறேன் தோழர்களே!

தேசிய நெடுஞ்சாலையில் கிடக்கும் பிணமொன்று
வாக்காளர் பட்டியலில் அது இந்தியக் குடிமகன்
வருணாசிரமப் பட்டியலில் அது சூத்திர பஞ்சமன்

பேச முயன்று முறிக்கப்பட்ட அதன் குரல் வளையில்
அசோகச் சக்கரத்தின் அரசாங்க முத்திரைகள்
எழுத முயன்று சிதைக்கப்பட்ட அதன் கைகளில்
'எழுத்துச் சுதந்திரத்தின்' தடயங்கள்
பீதியுற்று பிதுங்கிய அதன் விழிகளில்
செத்துக் கிடக்கின்றன தேசிய மொழிகள்

அடையாளம் தெரிகிறதா?! அது யாருடைய பிணம்

www.padippakam.com



என்னுடையது... உங்களுடையது
நம் எல்லோருடையதுமான இந்த பிணத்தின் நாற்றம்
எல்லை தாண்டி இணைக்கிறது நம் சோகத்தை
எல்லை தாண்டி இணைக்கிறது கோபத்தை

அதிகாரத்தின் ஆசன வாய்கள்
அவிழ்த்த பொய்யை
இதிகாசமென்றும் இலக்கியமென்றும்
ஏற்றியதுபோதும் எங்கள் தலையில்

ஆஸ்த்தான அறிஞர்களே! அந்தோ பரிதாபம்
உங்கள் இந்திரலோகத்து இலக்கியத் தரம்
கடைசியில் 'எய்ட்ஸ்' விளம்பரத்தில் போய் முடிந்தது

ஆதிசங்கரனின் சௌந்தர்ய லகரியையும்
அமெரிக்க ஜாக்சனின் காமாந்த உளறலையும்
பக்குவமாய் கலப்பதே இங்கே பாரதப் பண்பாடு
பக்தியின் ஆபாசத்திற்கு சங்கரமடங்கள்
ஆபாசத்தின் பக்திக்கு சாட்டிலைட்டுக்கள்
சகிக்க முடியாதவர்கள் சட்டத்தின் கைதி
ஜாடையாய் ஒதுங்குபவர்களுக்கு சாகித்ய அகாதமி

ஒருதரம்... ரெண்டுதரம் போய்
இப்போது உலகத்தரம்
இறக்குமதியாகும் சரக்கின்வழி
உரமாய், உணவாய், உணர்வாய்
ஏகாதிபத்திய இயல்புகள்
அறிவீனங்களை அசத்திவிட்டது நவீனம்
அன்னையின் கருவிலும் அன்னிய மூலதனம்

அரசியல் சட்டத்தை திருத்தி திருத்தி
அசத்திவிட்டது
இனி புததகத்தையே மாற்றி ஜெயின் டயரி!
எங்கள் கவிதைகள் குத்தலாகத்தான் இருக்கும்
வெடிப்புற்ற எம் வயலில் கோரைதான் மண்டும்
வெறுப்புறற எம் வாழ்வும் கோபத்தை தூண்டும்

ஆய்வாளர்களே!
இலக்கிய ஆவணங்களில் எங்களைத் தேடியதுபோதும்
எங்கள் கலை இலக்கியம் மீதான விமர்சனம்
காவல் துறையின் அறிக்கையிலிருக்கிறது
கரிசனமிருந்தால் தெருசனங்களிலிருந்து
தேடுங்கள் படைப்பை! □□

www.padippakam.com

# எழுச்சி மிகு AILRC மாநாடு

ஆகஸ்டு 10ஆம் தேதிமாலை 3 மணி. உதயம் திரையரங்கங்களில் பண்பாட்டு வியாபாரிகள் மூளைக்குள் வலிந்து திணித்தச் சீரழிவுகளைச் சுமந்துகொண்டு வந்த மக்களுக்கு இன்ப அதிர்ச்சி! தங்களுக்கான முழக்கங்களை எழுப்பிக்கொண்டு, பாடல்களை, வீதி நாடகங்களை, மலை வாழ்மக்களின் நடனங்களை, நாட்டுப்புற கலைகளைப் புதிய வடிவங்களிலும் உள்ளடகத்திலும் கண்ட கண்கள் வியப்பால் விரிய பரவசப்பட்டனர். பண்பாட்டு படையின் முன்னேடிப் போராளியாக விளங்கும் அனைத்திந்தியப் புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் (AILRC) யின் ஆறாவது மாநாட்டு கலை ஊர்வலம் தான் அது! ஆகஸ்டு, 9, 10 தேதிகளில் கே. கே. நகரில் இம்மாநாடு ''ஏகாதிபத்திய தாக்குதல்- நமது பண்பாட்டு எதிர்தாக்குதல்'' என்றப் பொருளை மையமாக கொண்டு நடத்தப்பட்டது. சமீப காலங்களில் நமது மக்கள் மீது ஆளும் வர்க்கங்கள் நடத்தும் ஏகாதிபத்தியத் தாக்குதல்கள் அதிகரித்து கொண்டு வரும் சூழ்நிலையில் இம்மாநாடு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். மக்கள் பண்பாட்டுப் பேரவை, மக்கள் கலை இலக்கியக்கழகம், மக்கள் கலை மன்றம் (P.A.F) ஆகிய அமைப்புகள் இணைந்து கூட்டமாக தலைமையேற்று இம்மாநாட்டை நடத்தின.

AILRC கொடியை ம.ப.பே செயலாளர் தோழர் செந்தாரகை ஏற்றி வைத்து மாநாட்டைத் தொடங்கி வைத்தார். ''கஷ்டஜீவிகள் கம்யூனிஸ்டுகள்'' என்றதோழர் சுப்பாராவ் பாணிகிரஹியின் பாடலைத் தமிழ். தெலுங்கு, மலையாளம், மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, இந்தி, வங்காளம் என்று பல மொழிகளில் பாடினர். அழகுற வடிவமைக்கப்பட்ட தியாகிகள் நினைவுத் தூணுக்கு செயற்குழு உறுப்பினர்கள் மலர்கள் தூவி செவ்வணக்கம் செலுத்தினர். தியாகிகள் பாடலை தமிழிலும் பிற மொழிகளிலும் கலைஞர்கள் பாடினர். ''தியாகிகள் புகழ் நீடுழி வாழ்க! தியாகிகளின் கனவை நினைவாக்குவோம்! ''என்ற முழக்கங்கள் விண்ணதிர முழங்கப்பட்ட காட்சி புதிய பாய்ச்சலை நாளங்களில் ஏறபடுத்தின. தொடர்ந்து ஓவியர் மருது அவர்கள் ஓவிய அரங்கை திறந்து வைத்தார். மருது, புருஷோத்தமன் நரேந்திரன், புகழேந்தி, ஹரி, வீரசந்தானம் என்று பல ஓவியர்கள் வரைந்த ஓவியங்களும், கார்டூன்களும் நினைவை விட்டு அகல மறுத்தன. தியாகிகளின் உருவ ஓவியங்களும் ஏகாதி

பத்திய கொடுந்தாக்குதல்களை அம்பலமாக்கும் கேலிச் சித்திரங் களும் சிறப்பாக இருந்தன.

மக்களின் கலைகளை விவரிக்கும் ஓவியங்களுடன் கூடிய இரண்டுத் தோரண வாயில்களும், செம்பதாகைகளும் வீசிப் பறந்த மாநாட்டு திடலுக்கு இ.க.க, (மா.லெ) கட்சியின் முதல் தமிழ்நாடு செயலாராக இருந்தத் தோழர் அப்புவின் பெயர் இடப்பட்டது. 1980 களின் ஆரம்பத்தில் நக்சல்பாரி வழியில் உழவர்களைத் தட்டி எழுப்பி எழுச்சிக்கொள்ள செய்த தோழர் பாலனின் பெயரை மாநாட்டு அரங்கம் தாங்கி நின்றது. ஜனநாட்டிய மண்டலியின் மையக் கலைக்குழு தோழரான குமாரி தனது சிறுவயது முதலே நக்சல்பாரி அரசியலை ஏற்று 10 ஆண்டுகளுககு மேலாக ஊழியராக இருந்தார். அவரின் கால் சலங்கை ஒலிக்காத ஆந்திர கிராமங்களேகிடையாது. அத்தோழர் சில மாதங்களுக்கு முன்பு மலேரியாவால் பாதிக்கப்படும் தாண்ட காருண்யாவின் சில பகுதிகளில் உள்ள கெரில்லா குழு தோழர் களுக்கு கலைப்பயிற்சி அளிக்க சென்று இருந்தபோது மலேரியா காய்ச்சலால் தாக்கப்பட்டார். மஞ்சள் காமாலை நோயும் இணைந்து கொள்ள மாநாட்டிற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே அவர் இயற்கை எய்தினார். அவரின் நினைவுகளைப் போற்றும் முகமாக மாநாட்டு மேடை **தோழர் குமாரி மேடை** என்ற பெயரை தாங்கி தன்னைதானே பெருமைப்படுத்திக் கொண்டது. மக்களுக் காக வாழ்ந்த மக்கள் போராட்டங்களை ஓவியங்களாக வடித்த தோழர் சிட்டபிரசாத்தின் பெயரில் ஓவிய அரங்கம் அழைக்கப் பட்டது. AILRC யின் துணைத் தலைவரும், 70 களில் இருந்து நக்சல்பாரி அரசியல் தலைமையை ஏற்று செயல்பட்ட பண் பாட்டுப் போராளி மேற்கு வங்காளம் தோழர் அருண்சன்யாமத் நினைவை கூறும் முகமாக பொதுக் கூட்டந்திடலுக்கு அவர் பெயர் சூட்டப்பட்டது. நிலவுடமை—ஏகாதிபத்தியத்தை வீழ்த்து கின்றபோராட்டக் களத்தில் வீரமரணம் எழுதிய முன்னோடிகள், பண்பாட்டு போராளிகள் நினைவை பல வகைகளிலும் தாங்கி நின்று இம்மாநாடு அவர்கள் இவ்வாறு பெருமைபடுத்தியது.

அரங்கில் கூடியிருந்த சார்பாளர்களையும், பார்வையாளர் களையும் தோழர் இல. கோவிந்தசாமி வரவேற்றார். முனைவர் தோழர் கோ. கேசவன் மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். பொது செயலாளர் தோழர் வரவரராவ் செயலாளர் அறிக்கையில் கடந்த செப்டம்பர் 1993 முதல் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களையும் இந்த ஆண்டுகளில் அ.இ.பு.ப.இ மற்றும் அதன் உறுப்புகளாள் உள்ள 18 அமைப்புகளும் மேற்கொண்ட கலை இலக்கிய பண்

www.padippakam.com



பாட்டுச் செயல்பாடுகளையும் விரிவாக விளக்கிப் பேசினார். தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம், முற்போக்கு மாணவர் சங்கம் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்கள் மாநாட்டை வாழ்த்திப் பேசினார்கள்·

**ஏகாதிபத்திய தாக்குதல்—நமது பண்பாட்டை எதிர் தாக்குதல் :**

மதியம் அமர்வாக கருத்தரங்கம் நடைபெற்றது. APCLC-யின் துணை தலைவர் டாக்டர் ஹச்கோபால் ''வணிகமயமாகும் கல்வி'' பற்றி விரிவாக உணர்ச்சி பொங்க பேசினார். நமது கல்வி முறையில் உள்ள ஏகாதிபத்திய குணாம்சங்களைப் பற்றியும், பல்வேறு வெகுசன ஊடகங்ளின் வாயிலாக நடைபெற்று வரும் ஏகாதிபத்திய கல்விச் செயல்பாடுகளையும் விளக்கினார். மக்களுக்கான கல்வி முறையை நாம் வளர்தெடுத்து, அரசின் கல்விக் கொள்கைக்கு மாற்றாக செயல் முறைப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார் ''பண்பாட்டுத் தளத்தில் ஏகாதி பத்திய தாக்குதல்களும் அறிவுஜீவிகளின் பங்கும்'' பற்றி பேசிய தோழர் சோமசேகரன் (கேரளம்) பண்பாட்டு ஏகாதிபத்தியம் என்று ஜேம்ஸ்பீட்டர் உட்பட பல அறிஞர்கள் முன்வைக்கும் கோட்பாடுகளை விமர்சனம் செய்தும் பின் நவீனத்துவம் என்பது எவ்வாறு ஏகாதிபத்தியக் கொள்கைகளுக்கு சேவை செய்கிறது என்றும் விளக்கிப்பேசினார்.

மாலையில் நடந்த கவியரங்கைத் தோழர் துரை சண்முகம் (ம.க.இ.க.) வழி நடத்தினார். வரவரராவ், கஞ்சன் குமார் (டில்லி), ரீனா(டில்லி), பாரிஸ்தார்(டில்லி), இலக்குவன் (ம.ப.பே) சக்திவேல் (ம.ப.பே)என பல மொழி கவிஞர்களும் இதில் கவிதைகள் வாசித்தனர், ஆங்கிலத்தில், இந்தியில் இருந்த பேச்சுகளை மோகன், சே. கோச்சடை, குறிஞ்சி, சேதுராமன், காந்திமதி ஆகியோர் சிறப்பாக தமிழில் மொழியாக்கம் செய்தனர். சுனித்குமார் கோஷின் இந்திய பெரு முதலாளிய வர்க்கத்தை (தமிழ் மொழியாக்கம்) தோழர் சி. பிரசாத்தும், டபுள்யு சி. தேப்-யின் மாசேதுங் சிந்தனைகள் (தமிழாக்கம்) புத்தகத்தை தோழர் பி. கே. வேணுகோபாலும், சிங்கரேணி சுரங்க தொழிலாளர்ப் போராட்டம் (தமிழ்) பற்றியப் புத்தகத்தை தோழர் சி.எஸ்.ஆர் பிரசாத்தும், தோழர் குமாரி (ஜன நாட்டிய மண்டலி) வாழ்க்கை வரலாற்றை (தெலுங்கு) தோழர் சூரியாவும் 'காட்'டாட்சி (தமிழ்) கம்யூனிசம் தோற்றதா? முதலாளியம் வென்றதா (தமிழ்) ஆகியவைகளை தோழர் இல. கோவிந்த சாமியும், வங்காளப் புரட்சிகரப்பாடல் ஒலிப்பேழையைத் தோழகராம்பலியும் வெளியிட்டு அறிமுகப்படுததினார்கள் இந்த நிகழ்ச்சிகளின் இடை இடையேயும், இரவு 9 மணி முதல் நள்ளிரவு

www.padippakam.com



கடந்தும் கூட பலமொழிகளில் புரட்சிகரக் கலை நிகழ்ச்சிகள் மிகவும் எழுச்சியூட்ட கூடிய வகையில் நடத்தப்பட்டது.

மறுநாள் காலையில் தோழர் வரவரால் ''சிறைப்பட்ட இலக்கியம்'' பற்றி விளக்கினார். ''தமிழ்நாட்டில் பண்பாட்டு நிலைமைகள்'' பற்றி பேசிய தோழர் நடராசன் (ம.ப.பே.) தமிழ் நாட்டில் வெகுசன ஊடகங்களின் வழியாக நடைபெறும் ஏகாதி பத்திய பண்பாட்டு தாக்குதல்களை தமிழக உழைக்கும் மக்கள் பண்பாடு, தமிழ்மொழி மீதான மேல்நாட்டு பண்பாட்டு தாக்குதல்களை எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக விளக்கினார். ''உலகமயமாக்கமும் தேசியமும்—பண்பாட்டுச் சவால்கள்'' பற்றி பேசிய தோழர் மருதையன் (ம.க.இ.க.) ஏகாதிபத்திய வல்லரசு களால் அறிமுகம் படுத்தப்படும் உலகமயமாக்கல் கொள்கை, மறு காலனியாதிக்கம் பற்றியும், அதன் விளைவாக தேசிய பண் பாடுகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் பற்றியும் விளக்கினார்.

மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தபின்பு 2500 க்கு மேற்பட் டோர் கலந்து கொண்ட கலை ஊர்வலம் அசோக் நகரில் இருந்து சைதை தேரடிவரை நடைபெற்றது. காலையில் நடந்த பொதுக் கூட்டத்திற்குத் தோழர் வரவரராவ் தலைமைத் தாங்கினார். தோழர்கள் சின்னப் பையன் (ம.ப.பே) காளியப்பன் (ம.க.இ.க) இல. கோவிந்தசாமி (PAF) ஆகியோர் பேசினர். எழுச்சி ஊட்டும் கலை நிகழ்ச்சிகள் நூற்றுக்கணக்கானப் பொதுமக்களை இழுந்து வந்து நிறுத்தின. மாநாட்டு பொதுக்குழு கூட்டத்தில் தோழர் வரவரராவ் பொது செயலாளராக கொண்ட செயற்குழுத் தேர்ந் தெடுக்கப்பட்டது. நேப்பாளி சன சாகித்திய சங்'' என்ற அமைப்பு AILRCயில் புதிய அரங்கத்தினராக இணைக்கப்பட்டது.

ஆந்திராவில் இ.க.க. (மா.லெ) மக்கள் யுத்த கட்சி, ஆறு மக்கள் திரள் இயக்கங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரியும், ஆபாசச் சீரழிவை பரப்பும் 'ப்ளஸ் 21' சேனல் உள்ளிட்ட செயற்கைக் கோள் காட்சி ஒளிபரப்புகளைத் தடை செய்யக் கோரியும், இந்து மதப் புனித கோயில்களை விடுவிக்க விசுவ இந்து பரிஷத் கட்ட உள்ள பாசிசக் குண்டர் படையை எதிர்ததும் ஏகாதிபத்தியங்களுக்கு மீன் பிடிக்க அனுமதி அளிப் பதை எதிர்த்த மீனவர்களின் போராட்டத்தை ஆதரித்ததும், பொதுக் குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு பின்பு பொதுக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

பல்வேறு நக்சல்பாரி இயக்கங்களைச் சேர்ந்த கலை, பண் பாட்டு அமைப்புகள் இணைந்து நடத்திய இம்மாநாடு புரட்சியை நேசிக்கும் மக்களிடம், அறிவுஜீவிகளிடம் புதிய பாதைக்காணத் தெளிவை, நம்பிக்கையை ஏற்படுத்தியது. மொத்தத்தில், AILRC யின் ஆறாவது மாநாடு தமிழ்நாட்டில் ஏகாதிபத்தியப் பண் பாட்டை எதிர்த்து நடக்கும் போராட்டத்திற்கு அழுத்தமான திசைவழியைக் காட்டி உள்ளது என்றால் அது மிகையாகாது.

○ நடராசன்

படிப்பகம்

www.padippakam.com

# உலக அழகிப் போட்டி
# நமது பண்பாட்டின் மீதான படையெடுப்பு

உலக முதலாளிகள் முதல் உள்ளூர் முதலாளிகள் வரை இன்று தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள, அழகிப் போட்டிகள், ஆடை அலங்கார அணிவகுப்பு (ஃபேஷன் பரேடுகள்), போன்றவைகளை நடத்தி வருகின்றனர். உலக அழகிப் போட்டிக்கான நாளும் குறிக்கப்பட்டு விட்டன. ஆபாச வியாபாரிகள் ஆவலும் இதை வரவேற்கின்றனர். இதற்கு முன்னாள் ஜி. வெங்கடேசன் (ஏகாதிபத்தியச் சீரழிவை பரப்பும் மணிரத்தினத்தின் சகோதரன்) 'பாப்' பாடகன் மைக்கேல் ஜாக்சனை வைத்து இந்தியாவில் பல இடங்களில் நிகழ்ச்சிகள் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பேரங்கள் படியாததாலும், இதர காரணங்களாலும் நிகழ்ச்சிகள் நடைபெறவில்லை. இதில் பங்குதாரர்களாக சேர்க்கப்படும் என திரட்டப்பட்ட நிதியையும் பட்டை நாமம் சூட்டிவிட்டனர். இதே போல் இன்று அரசியலில் தரகு வேலைகளில் ஈடுபட்டு வந்த அமிதாபட்சன் இன்று புதியதாக ''அமிதாப்பட்சன் கார்ப்பரேஷன் லிமிடெட்'' என நிறுவனத்தை நிறுவி இதன் மூலம் திரைப்படங்களையும், பல்வேறு வகையான ஆபாச வியாபாரங்களையும் செய்து வருகின்றான். இவர்கள் உலக அழகிகளை (!) வைத்துத் திரைப்படம் எடுப்பது என்பது நிறைவேறிய உடன், அடுத்தபடியாக உலக அழகிப் போட்டிகளையும் நடத்த திட்டமிட்டுள்ளனர். வரும் நவம்பர் மாதம் கர்நாடகாவில் உள்ள பெங்களூரில் உலக அழகிப் போட்டி நடத்துவதற்கான ஏற்பாடுகளும், விளம்பரங்களும் அநநகரையே நாறடிக்கின்றன. உலக அழகிப் போட்டியின் அங்கமாக சென்னையிலும், பம்பாயிலும் கூட அழகிப் போட்டிகளை நடத்த இந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையில் இவ்வழகிப் போட்டியை நடத்தக் கூடாது. என்று பல பெண்கள் அமைப்புகள் அழகிப் போட்டிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். பல்வேறுப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். விவசாயிகள் அமைப்பை சார்ந்த நஞ்சுண்ட சாமியும் அழகிப் போட்டிக்கு எதிராக அறிக்கை விட்டுள்ளார். பெரிய ஓட்டு பொறுக்கி கட்சிகளோ இது குறித்து வாய் திறக்கவில்லை. பித்தலாட்டத்தின் வடிவமான பி.ஜே.பியோ போராட்டத்தை திசை திருப்ப நீதிமன்றத்தில் முறையிடுவதாக

கூறியுள்ளது. அமிதாப்பச்சனும். கர்நாடக ஜனதாதள அரசும் அழகிப் போட்டியை நடத்துவதற்கு கங்கணம் கட்டி கொண்டுள்ளது. இருப்பினும் உலக அழகிப் போட்டிக்கு எதிரான போராட்டம் பெருகி வருகின்றன. உலக அழகிப் போட்டி, நகர அழகிப் போட்டி, வட்டார அழகிப் போட்டி என்று திடீரென்று சில ஆண்டுகளாக ஏன் நமது நாட்டில் நடந்து வருகின்றன. இதற்கு முன்னால் ஏன் அழகிப் போட்டிகள் நடக்கவில்லை. விரிவாகப் பார்ப்போம்.

பத்தாண்டுகளுக்கு முன்பு அழகிப் போட்டிகளும் ஆடை அலங்கார அணிவகுப்புகளும் பல இடங்களில் மக்களால் எதிர்ப் புணர்வுடன் பார்க்கப்பட்டன. ஏன் சில ஆண்டுகள் முன்பு கூட திருச்சியில் கத்தோலிக்கத் துறவிகள் பள்ளியொன்றில் நடத்தப் பட்ட அழகுராணிப் பேட்டி வெளிப்படையாக மக்களின் எதிர்ப் புக்குள்ளானது. இது தொடர்பாக திருச்சியில் பெரும் போராட்டமே நடந்தது. ஆனால் இன்றோ காட்சி மாறிவிட்டது.

மாடல் அழகி மதுசாப்ரே ஒரே ஒரு கேள்விக்கு தவறாகப் பதில் சொன்னதனால் உலக அழகிப் பட்டத்தைத் தவறி விட்டதும், சுசுமிதாசென்னும், ஐசுவரியாராயும் உலக அரங்கில் இந்தியாவை முதலிடத்திற்குக் கொண்டு வந்ததும், உலக அழகி பட்டத்தை மன்பிர்த் மயிரிழையில் தவறிவிட்டதும் இன்றைய செய்தி ஊடகங்களின் தலைப்புச் செய்திகளாகிவிட்டன. இது வரை இல்லாத இந்தியப் பெண்களுடைய அழகு இன்று மட்டும் எப்படி வந்தது? எப்படி இந்தியப் பெண்கள், அதே போல மூன்றாம் உலகப் பெண்கள் தமது அழகினாலும் அழகுராணிப் பேட்டிகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதன் மூலம் தங்களுடைய புத்திசாலித்தனத்தினாலும் உலகை வெற்றி கொள்கிறார்கள்?

இதற்கு காரணம் இன்றைய உலகச் சூழலே? இன்றைய உலகச் சூழ்நிலை என்ன? அதில் இந்தியாவுடைய நிலை என்ன? பன்னாட்டுக் கம்பெனிகள் இந்தியாவை ஆதரவோடு இன்று அணுகுகிறார்கள். அவர்கள் முதலீடு செய்வதற்கு மிகத் தகுதி யான இடமாக இந்தியா இருக்கிறது. ஏனெனில் இந்தியாவும் அதைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளும் இத்தகைய பன் னாட்டுக் கம்பெனிகளின் உற்பத்தி பொருட்களுக்கேற்ற வளமான பெரிய சந்தையாக இருக்கிறது.

துணைக்கோள் வழித் தொலைக்காட்சிகள் மூல மாகவும், பிற அச்சு வழி செய்தி ஊடகங்கள் மூலமாகவும் பன்னாட்டுக் கம்பெனிகள் இச்சந்தையைப் பிடிப்பதற்குப் பண்

www.padippakam.com



பாட்டுப் போரைத் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போரையும் அதன் உள்ளார்ந்த அரசியலையும் அறியாத நம்முடைய அறிவு ஜீவிகளும், பத்திரிகை ஆசிரியர்களும் அழகிப் போட்டிகளையும் அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகளின் வழியாகக் கிடைக்கும் அற்ப வெற்றிகளையும் பாராட்டி வரவேற்று தலையங்கங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, மூன்றாம் உலகச் சந்தை பன்னாட்டு கம்பெனிகளை வரவேற்க மறுத்தாலும் அவர்கள் விடுவதாயில்லை. 'டங்கல்' வரைவின் மூலமாக மறுப்புக் காட்டும் நாடுகள் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டு நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

உலக அழகிப் போட்டியில் பங்கு கொள்ளும் பெண்களை இந்தியாவிலிருந்து தயார் செய்து அனுப்பி வைப்பது "பெமினா" என்ற பெண்களுக்கான ஆங்கிலப் பத்திரிகையே! இதன் ஆசிரியர் "இந்தியப் பெண்கள் வெற்றி பெறுவதின் காரணம் பங்கேற்பவர்களை நாம் சிறப்பாகத் தயார் செய்து அனுப்புவது மட்டுமல்ல. இந்தியா இன்று உலகின் கண்களில் பட்டுக்கொண்டிருக்கிறது. அதுவே மூலகாரணம்" என்கிறார். பொருளாதார மறுசீரமைப்பினாலேயே இந்தியா உலகத்தின் கண்களில் பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அப்பொருளாதார மறுசீரமைப்பிற்கு என் நன்றி என்றும் கூறியுள்ளார். இவருடைய அறிக்கையே அழகிப் போட்டிகளின் பின்னால் உள்ள உண்மை நிலையை உலகுக்குக் வெளிச்சம் போட்டுக் காட்டப் போதுமானது.

எழுபதுகளின் துவக்கப் பகுதியில் உலக அழகிப் போட்டிகள் நிகழ்ந்ததெல்லாம் லண்டன், ஃப்ளோரிடா, மியாமி, பாரிஸ் போன்ற ஐரோப்பிய அமெரிக்க நகரப் பகுதிகளில் மட்டுமே ஏனெனில் அப்போது உலகமயமாக்கல், உலகமயமான சந்தை எதுவுமே நடைமுறையில் இருக்கவில்லை. அக்காலக் கட்டத்தில் இந்தியாவிலோ மூன்றாம் உலக நாடுகளிலோ உலக அழகிப் போட்டிகள் நிகழ்த்தப் பெறவில்லை.

ஆனால் இன்று உலகச சந்தை விரிந்துள்ளதாலும் உலகமயமாக்கல் நிகழ்ந்து கொண்டிருப்பதாலும் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பகுதிகள் மிகக் குறுகிய சந்தையாக இருப்பதாலும் பன்னாட்டு முதலாளிகளின் கவனம் இந்தியாவிலும் பிற மூன்றாம் உலக நாடுகளிலும் விழுந்துள்ளது. எனவே, அவர்களின் விற்பனை விளம்பர உத்தியான உலக அழகிப் போட்டி நிகழும் மையங்கள் மூன்றாம் நாடுகளாக அமைந்துள்ளன. பாங்காக்,

www.padippakam.com



மணிலா, தென்னாப்பிரிக்கப் பகுதியில் உள்ள சன்சிட்டி, நமிபியா வின் தலைநகர் போன்ற இடங்கள் இன்று அழகிப் போட்டியின் மையங்களாக உள்ளன. பெங்களூரில் உலக அழகிப் போட்டி நடத்துவதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

போட்டி நடைபெறும் இடங்கள் மட்டுமல்லாது இன்று வெற்றி பெறும் பெண்களும் கூட மூன்றாம் உலக நாட்டுப் பெண் களாகவே இருக்கின்றனர். உலகம் பல பண்பாடுகளைக் கொண்டது. ஒவ்வொரு நாடும் தனித்த வகையான, குறிப்பிட்ட சில வகையான பண்பாடுகளைக் கொண்டுள்ளன. ஒரு பண் பாட்டுக்கு அதனுடைய உறுப்பினர்களே அழகானவர்களாகப் புலப்படுவர். இதுவே இயல்பு. தமிழ்நாட்டவருக்கு மங்கோலிய இனத்தவரோ, நீக்ரோ இனத்தவரோ அழகானவராக தோன்ற மாட்டார். ஆனால், வெள்ளை நிறத் தோலின் காரணமாக ஐரோப்பியரை அழகானவராக ஏற்றுக் கொள்வார்கள். அதே வேளை அவ்ஐரோப்பிய இனத்தவர் நமது பண்பாட்டுச் சூழலுக்கு அந்நியப்பட்டவராகத் தோன்றுவர். இத்தகைய அழகு குறித்த கருத்தாக்கங்கள் ஒவ்வொரு பண்பாட்டிற்கும் உண்டு. பல தேசிய இனங்களையும் அவற்றுக்கான பல்வேறு பண்பாடு களையும் கொண்ட இந்தியாவில் ஒரு இனத்தவர் பிற இனத்த வரை, ஒரு பண்பாட்டினர் பிற பண்பாட்டினரைச் சகித்துக் கொள்ளுதல், அழகானவராக ஏற்றுக்கொள்ளுதல் இயல்பானதாக இருக்கிறது.

இந்தியாவில் வெள்ளைத்தோலுடன் உள்ள ஒருவரை, பண்பாடுகளுக்கு பொதுவான ஒரு முகம் உடையவரை அழகி யாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர் மேற்சொன்ன காரணங் களினால் பன்னாட்டுக் கம்பெனியின் இந்தியா முழுமைக்கான விளம்பரங்களுக்கு உதவுவார். இதே போலவே பிற மூன்றாம் உலக நாட்டு அழகிகளின் நிலையும். இதுவே உண்மையான அழகிப் போட்டிகளின் பின்னணி! பொருட்களைச் சந்தை படுத்து வதற்கு பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தும் ஏமாளி விளம்பரக் கருவிகளே இன்றைய அழகிகள்.

இன்று கொக்கோ கோலாவுக்கும், பெப்சி கோலாவுக்கும் சுசிமிதாவும் ஐசுவரியாவும் விளம்பரம் கொடுக்கும் பின்னணியும் இதுதான். கொக்க கோலா கம்பெனியின் தேவைக்காக சுசிமிதா உலக அழகியானார். அப்படியானால் இவ்வளவுப் பெரிய இந்தியச் சந்தையில் ஒரு உலகஅழகியை வைத்துக்கொண்டு கொக்ககோலா

www.padippakam.com



விளம்பரம் செய்யும்போது பெப்சி கோலாச் சும்மா இருக்க முடியுமா? முடியாது. எனவே உலக அழகிப் போட்டியைப்போல் சிறிது வேறுபாடுள்ள போட்டியில் ஐசுவரியா அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்று அந்த ஐசுவரியா பெப்சி கோலா விற்கு விளம்பரத்திற்காக தனது உடலைக் கவர்ச்சிப் பொரு ளாக்கிக் கொண்டு நிற்கிறார்,

இவை விளம்பரத்திற்கு உரியவையாக மட்டுமல்லாது. ஆதிக்கப் பண்பாட்டை நம்மிடையே பரப்பும், சுரண்டலின் உண்மை நிலையை மறைக்கும் கருவிகளுமாகும். அதிலும் குறிப் பாக பெண்களின் மீதான ஆதிக்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய உண்மையான விடுதலையையும் கூட இது தடுக்கிறது. பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டிய தெளிவையும் வரவிடாது தடுக் கிறது. தங்களின் மீதான சுரண்டலுக்கெதிராக ஒன்றிணைய வேண்டிய பெண்கள் இன்று அழகிப் போட்டிகளின் வழியாக, அதற்காக மட்டுமே ஒன்றிணைகிறார்கள். ''சுதந்திர வர்த்தக வளையம்'' அல்லது ''சுதந்திர வர்த்தகப் பகுதிகள்'' எனப்படும் பகுதிகளில் மூன்றாம் உலக நாடுகளின் மனித உழைப்பை பன்னாட்டு நிறுவனங்கள் உறிஞ்சுகின்றன.

இவற்றில் பெரும்பாலும் நுண்ணிய பணிகளுக்கெனய இளம் பெண்களே வேலைக்கமர்த்தப்பட்டுக் கடுமையானச் சுரண்டலுக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் உரிமைகளுக்கே ஒருங்கிணைவதை தடுத்து திசைதிருப்புவதற்காக, அவர்களிடையே அழகிப் போட்டியும், ஆடை அலங்காரப் போட்டியும் பன்னாட்டு பிசாசுகள் நடத்துகின்றனர்.

இப்படியாகத் திணிக்கப்படும் 'அழகு' பற்றிய கருத் தாக்கம் நமதுபண்பாட்டிற்குரிய அழகுடன் தொடர்புடையதல்ல. மிகைப்படுத்தப்பட்ட புனைவுத் தன்மையான, கிளர்ச்சியூட்டு கின்ற இவ்வழகுக் கருத்தாக்கங்கள் இன்று பண்பாட்டில் பல சிக்கல்களைத்தோற்றுவிக்கிறது. இந்நிர்பந்தங்களால் அழகினைத் தேடி அழகு நிலையங்களை நோக்கி இளம் பெண்கள் படையெடுக் கிறார்கள். ஆண்களும் தனது மனைவியரை அவ்வழகுக்கான அளவு கோலில் வைத்து, மனப்பிணக்குக்கும் மனமுறிவுக்கும் உள்ளாகின்றார்கள். ஆனால் லாபமடைவது மட்டும் இத்தகைய விளைவுகளால் விற்பனையாகும் சோப் முதலான அழகு சாதனப் பொருட்களினை உற்பத்திச் செய்யும் மேல்நாட்டு நிறுவனங்களே.

ஒட்டு மொத்தத்தில் பெண்கள் ''முழுமையான மனித ஆளுமைகள்'' என்ற கருத்து மாறி, வெறும் அழகுப்பெட்ட

www.padippakam.com



கங்கள் என்ற இழி நிலைக்குக் கொண்டு செல்வதே நிகழ்ந்துள்ளது இன்றைய நுகர்வு பண்பாட்டின் பாலியல் சார் விளம்பரக் கருவி களாகவே பெண்களின் ஆளுமை இதனால் குறுக்கப்படுகின்றது. சிறிய நகரங்கள் கூட இப்பண்பாட்டுப் படையெடுப்பால் சீரழிகிறது.

இவற்றையெல்லாம் மேல்தட்டுவர்க்கத்தினர் புரித்து கொள்ளப் போவதில்லை என்பது டெல்லி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் வெளிப்படுகிறது. ஓர் பெண் வழக்கறிஞர் பாலியல் இதழுக்கு அரை நிர்வாணப் படங்கள் எடுக்க 'போஸ்' கொடுத் திருந்தார். அதுக்குறித்து மனு ஒன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது நீதிபதியின் தீர்ப்பு அச்செயலை ஆதரித்தே இருந்தது. ''உலக அழகிப் போட்டிகளில் அரை நிர்வாணமாக உலக அழகிகள் பங்கு கொள்வதும் அவர்கள் இந்தியாவின் பண் பாட்டுக்காண தூதுவர்களாகக் கருதப்படுவதும் நிகழும் போது, அழகும் பெட்டகமான இந்த இளம் பெண் வக்கீல் ஏன் இந்த அழகுப் போட்டிக்கிடையில் தனது பங்களிப்பைச் செய்யக் கூடாது'' என்று கேட்டு ஆச்சரியப்பட்டிருந்தது அத்தீர்ப்பு! நிச்சயமாக இது ஓர் ஆண் நீதிபதியின் ஆதிக்க வாசகங்களே! பெண் வழக்கறிஞருக்கு எதிராக தாக்கல் செய்தமனு நிராகரிக்கப் பட்டதென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அழகிப் போட்டிகள் இவ்வாறு பன்முகத் தன்மைகளுடன் இன்று நம்மைத் நமது பண்பாட்டைத்தாக்குகின்றன. இளைய தலை முறையை கிளர்ச்சியூட்டிச் யாதார்த்த நிலைமையை மழுங்கடிப்பது, பெண்களின் பிரச்சனைகளைத் திசை திருப்புவது ஆண்களிடம் நமது பண்பாட்டின் அழகு பற்றிய தாழ்வு மனப் பான்மையை ஏற்படுத்துவது, இதன் காரணமாக முன்னேறிய நாடுகளின் பண்பாட்டின் மீது அதன் பொருட்கள் மீது நுகர்ச்சி சார்ந்து மோகம் ஏற்படுத்துவது, சுயப்பண்பாட்டை இவற்றால் தாழ்வாக மதிப்பிடுவது எனப்பல தொடர் விளைவுகள் ஏற்படக் காரணமாகின்றன. ஓர் ஆதிக்க பண்பாட்டில் சிக்கவைக்கும் வலையே இவை என்பது மிகையல்ல. உலக அழகிப் போட்டி யையும், தமிழ்நாட்டில் பல நகரங்களில் நடைபெறும் அழகிப் போட்டிகளையும் இந்தப் பின்னணியில் புரிந்துக் கொண்டு நாம் முறியடிக்க வேண்டும்.

**வின்செட் & தீ. நிரஞ்சனா**

தொகுப்பு : Kalam, AIRSF இதழ்

www.padippakam.com

# சிறைப்பட்ட இலக்கியம்

○ *வரவர ராவ்*

(ஏகாதிபத்தியத்தின் கொடுந்தாக்குதல் — நமது பண்பாட்டு எதிர்ப்பு என்ற தலைப்பில் அனைத்திந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மாநாட்டில் படித்த கட்டுரை.)

''உற்பத்தியின் எல்லாக் கருவிகளின் மிக விரைந்த மேம்பாட்டாலும் பேரளவில் பெற்றுள்ள தொடர்புச் சாதனங்களாலும், அவரவர் உற்பத்தி முறைகளே கூட அழிந்து போகக்கூடிய கடும் வேதனையுடன் முதலாளிய உற்பத்தி முறையை மேற்கொள்ளுமாறு முதலாளிய (பூர்ஷ்வா) வர்க்கம் எல்லா தேசங்களையும் கட்டாயப் படுத்துகிறது. முதலாளியவர்க்கம் எதை நாகரிகம் என்று கருதுகிறதோ அதை ஏற்றுக் கொள்ளும் படி, அதாவது முதலாளிய வர்க்கமாக மாறும்படி அது அத்தேசங்களைக் கட்டாயப்படுத்துகிறது. ஒரே சொல்லில் கூறினால், அது தன்னுடைய சொந்தப் படிமத்தைப் போன்ற ஓர் உலகைப் படைக்கிறது.''

○ மார்க்ஸ்— எங்கெல்ஸ்

முதலாளிய வர்க்கம் தன்னுடைய சொந்தப் படிமத்தைப் போன்ற ஓர் உலகத்தை உருவாக்குகிறது என்றால், முதலாளிய உற்பத்தி முறையின் உச்சகட்டமான ஏகாதிபத்தியம் அதையே ஒரு பரந்த அளவில் செய்கிறது. அது உலகை வரையறுக்கிறது. அந்த வரையறையையே உலகம் ஒப்புக் கொள்ளும்படித் திணிக்கிறது. முதலாளிய வர்க்கம் தன்னுடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் மற்ற ஒவ்வொரு பண்பாட்டிலும் புகுத்துகிறது; மேலும் மக்கள் அந்த பண்பாட்டு நடைமுறைகளைப் போல (இமிடேட்) செய்யும்படி வற்புறுத்தப்படுகிறார்கள். ஒரு சொல்லில் கூறினால், உலகையே ஒரு படித்தானதாக்குகின்ற உலகமயமாக்கும் குறிக் கோளுடைய வாழ்க்கைப் பணியுடன் அது செயல்படுகிறது.

மக்களுடைய பன்மைத் தன்மையுடைய பண்பாட்டு நடைமுறைகளை மதிக்கிறவர்களாகவும், நாம் வாழ்கிற பன் முகத் தன்மையுடைய நடப்பியலைச் சித்தரித்துப் பகுத்தாய்கிற பல்வேறு படிமங்களுடன் செயல்படுகிற புரட்சிகர எழுத்தாளர்

படிப்பகம்

www.padippakam.com



களாக நாம் உள்ள படியால் உலகமயமாக்கல் மற்றும் ஒரு படித் தானதாக்குகிற ஏகாதிபத்தியத்தின் முயற்சிகளையும் புரிந்து கொள்ளுவதும், எதிர்த்து நிற்பதும் நமது கடமை ஆகும். உற்பத் திக் கருவிகள் மட்டுமில்லாது பண்பாட்டு நடைமுறைகளும் கூடச் சிறைப்பட்டாக வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார் கள். இந்தச் சிறைத் தளையை உடைத்தெறிய வேண்டியது நமது கட்டாயக் கடமை ஆகும். ஆனால் இந்தச் சிறைத்தளை எப்படிச் செயல்படுகிறது? இலக்கியம் என்பது சாராம்சத்தில் சுதந்திரத்துக் கான ஒரு தேடலாகும். அப்படி இருக்கும்போது, இலக்கியத்தை உண்மையில் எவராவது சிறைப்படுத்த முடியுமா? வெளிப்பாட்டுக்கான தேடலில் உள்ள சுதந்திரக் குரலைச் சங்கிலி யால் கட்டிப் போடுவது இயலாத செயலாகும்.

அதனால் தான் ஏகாதிபத்தியம் தனது கொடுந்தாக்குதலை ஏராளமான மறைமுகமான வழிகளில் தொடுக்க முயல்கிறது. அதனுடைய செயல்பாடு மிகவும் அடிநாதமாக உள்ளுறைந்து இருக்கிறது; எனவே அதை மேலோட்டமாகப் புரிந்து கொள்ளு வது கடினமாகும். அதனுடைய வெளிப்பாடுகளைப் பொதுவாக எளிதாகப் புரிந்து கொண்டு அடையாளம் காணமுடியாது. அனைத்தும் தழுவிய மானுடவிழுமியங்கள் உலகக் கிராமம் (global village) மறறும் பண்பாட்டு இடைவினை என்பதைப் போன்ற பல்வேறு கவர்ச்சியான முழக்கங்களை முன் வைத்து அதன் ஊடுருவல்கள் நடக்கின்றன. அது ஏகாதிபத்தியத்தின் பொருளியல் மற்றும் அரசியல் முகங்களைப் போல அவ்வளவு வெளிப்படையானதன்று. நம்மில் ஏகாதிபத்தியக் கொள்ளைச் சுரண்டலையும், ஆதிக்கத்தையும் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் கூட, இலக்கியத்தில் ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலைச் சுருக்க மாகத் தெரிந்து கொள்துவ கடினமாக உள்ளது. போபால் போன்று மிக மோசமாக நடந்த சம்பவததில்கூட ஏகாதிபத்தியம் நம்மீது என்னென்ன செய்யமுடியும் என்பதை ஒருவர் எளிதில் காணமுடியும். ஆனால் பண்பாட்டுத் தளங்களில் நூற்றுக் கணக் கான போபால்கள் நம்முடைய முகத்துக்குக் கீழேயே நாம் காண முடியாமலும், நம்மால் புரிந்து கொள்ள முடியாமலும் நடந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய எல்லாப் பண்பாட்டு வடிவங் களிலும் ஊடாடிக் கொண்டிருக்கும் ஒரு நீண்ட அமைதியான வன்முறை இதுவாகும்.

குறிப்பாக, இலக்கியத்தில் ஏகாதிபத்தியத்தின் கொடுந் தாக்குதலானது, அந்தத் துறையில் பல தலைமுறைகளாக மனிதப்படைப்பாற்றல் செய்து முடித்ததை எல்லாம் மறுதலிப்ப தாகும். அந்தப் பொருளில் இது மூன்றாவது உலக மக்களின்

www.padippakam.com



இலக்கிய வெளிப்பாடுகளுக்கு எதிரானது மட்டுமின்றி, இலக்கியத் துறையில் மானுட இனம் அடைந்திருக்கிற பாரம்பரிய மரபுரிமைகளுக்கும் கூட எதிரானதாகும். இலக்கியம் இன்றைக்கு அடைந்திருக்கிற வளர்ச்சிக் கட்டத்தை அடைய ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளது. நம்முடைய சொந்த அனுபவத்தையே எடுத்துக் கொண்டால் கூட, இலக்கியம் அரசவைக் கூடங்களிலிருந்து விடுவிக்கப் பெற்று மக்களைச் சேரும் பயணத்தை முறையாகத் தொடங்கியது. இதற்கிடையே, மக்கள் திரளிடையே உள்ள கலையியல் மற்றும் இலக்கிய மரபுகள், மக்களாலேயே பேணி வளர்க்கப்பட்டன. இந்த நேரத்தில் சச்சரவுக்குள்ளாகிய மரபுகளும் பலபத்து சோதனைகளும் கூட அவற்றின் வடிவங்களையும் உள்ளடக்கங்களையும் செழுமைப்படுத்திக் கவினுற அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. எனினும் இந்தக் சோதனைக் காலகட்டம் முழுவதிலும் மனச் சான்றுள்ள எழுத்தாளர்கள் இலக்கியத்தின் அடிப்படையான குறிக்கோள்களை ஒரு போதும் மறந்துவிடவில்லை. இலக்கியம் என்பது சமூக விழிப்புணர்வின் ஒருவடிவம் என்ற வகையில் சமூக நீதிக்கும், மனித கண்ணியத்துக்குமான போராட்டத்தில் மக்களின் கையில் ஒரு சக்தி மிக்க ஆயுதமாக மாறமுடியும். இலக்கியத்தின் கருப் பொருளும் வெளிப்பாட்டு வடிவமும் எதுவாக இருந்தாலும் கூட அது மக்களின் கஷ்ட நஷ்டங்களைச் சித்தரிக்கவேண்டும்; சமூக நீதி மற்றும் மானுட கண்ணியத்தை வாசகர்கள் மனதில் பதியச் செய்யவேண்டும்.

எனினும், அப்படியான மக்களுக்கு அறிவூட்டும் பாத்திரத்தை இலக்கியத்துக்கு அளிக்க ஏகாதிபத்தியம் விரும்பவில்லை. அறிவு பெறுவதற்கு எதிராக புலன் நுகர்வையும் (enjoyment), சமூகத்துக்கு எதிராகத் தனி நபரையும், மாற்றத்துக்கு எதிராக நிலை மாறாத் தன்மையையும் இலக்கியத்துக்கான நோக்கமாக ஏகாதிபத்தியம் முன் வைக்கிறது. தன்னுடைய ஆட்சிக்கு எந்தவிதமான சவாலும் இருக்கக் கூடாதென்ற அடிப்படையில் எல்லாவிதமான சீரழிவு மற்றும் நச்சுக் கருத்துகளால் இலக்கியத்தை நிரப்பி இளைஞர்களிடையே ஏகாதிபத்தியம் பரப்புகிறது.

பன்னாட்டு நிறுவனங்கள் வெளியிட்டு, அதிக அளவில் விற்பனையாகும் இலக்கியங்களை எடுத்துக் கொள்வோம், ஏறத்தாழ எல்லா இலக்கியங்களும் மிகவும் மலிவானவை; வக்கிரமான, நசிவுத் தன்மை கொண்ட பாலியல் உணர்வுகளைத் தூண்டுகின்றவை; வன்முறையைக் கட்டவிழ்த்து விடுபவை;

www.padippakam.com



செயற்கையான திகிலூட்டும் மர்மங்களைக் கொடுக்கின்றவை. இவை எல்லாம் இளைஞர்களை நோக்கிச் செயல்படுகின்றன. எவ்வித உணர்ச்சியுமற்ற உயிரற்ற பிணமாக அவர்களை மாற்ற அவை முயற்சி செய்கின்றன. சமூகத்தில் நிகழ்ந்து வரும் மோச மான அநீதிகளை எதிர்ப்பதற்கு உகந்த விதத்தில் இன்றைக்கு மக்களை ஆக்க வேண்டும். ஆனால் இத்தகைய நூல்கள் வாசகர் களை உணர்ச்சியற்றவர்களாகவும் வக்கிரபுத்திக் கொண்டவர் களாவும் மாற்றுகின்றன.

மேலும் இத்தகைய இலக்கியங்கள் முதலாளியக் கருத் துருவத்துக்கான 'இசைவை' ஏற்படுத்த முயலுகின்றன. இவ்வா றாக ஏகாதிபத்தியத்தால் படைக்கப்படும் இலக்கியங்கள் இராணுவமற்ற (இராணுவமில்லாமல் ஒடுக்கும்) நோக்கத்தைக் கொண்டுள்ளன. இத்தகைய பணிவு இராணுவ ஆதிக்கத்தால் ஏற்படும் பாதிப்பைவிட மிகவும் மோசமானதாகும். இத்தகைய புத்தகங்கள், இதழ்கள், அச்சு நூல்கள், மின்னணு ஊடகங்கள் போன்றவை புதிய மதிப்புகள், நடவடிக்கைகள், அன்றாட வாழ்க்கை முறை மற்றும் வாசகர்களின் தனித்தன்மைகள் ஆகிய வற்றை மாற்றி அமைக்க முயல்கின்றன. மெக்காலேயின் கல்வித் திட்டம் உடலளவில் இந்தியராகவும், சிந்தனை அளவில் ஐரோப் பியராகவும் உள்ள ஒரு சமூகத்தை உருவாக்கப்பாடுபட்டது. இதையே ஒரு பரந்துபட்ட தளத்தில் செயல்படுத்த ஏகாதிபத்தி யத்தின் இன்றைய கட்டம் விரும்புகிறது.

ஏகாதிபத்தியம் கருத்தியல் ரீதியில் மக்களைத் தாக்குவ தோடு பொருளியல் ரீதியிலும் தாக்குகிறது. ஏகாதிபத்தியம் பொருட்களுக்கு உள்ள சந்தையைப் போல ஏகாதிபத்திய இலக்கி யத்துக்கும் மூன்றாம் உலக நாடுகள் பெரும் சந்தையாக உள்ளது. பெரும் இலாபத்தை ஈடுகட்டுவதற்காகத் தங்கள் இலக்கியப் படைப்புகளை இங்கு விற்க விரும்புகிறார்கள்.

மக்கள் நடுவில் சரணாகதி உணர்வை உருவாக்குதல், தங்களின் இலக்கியப் படைப்பைப் பெருமளவில் விற்றல் ஆகிய இரண்டு நோக்கங்கள் இதில் உள்ளன. இதன் துணை விளை வாகச் சமூக மாற்றத்தைக் கொண்டுவருகிற மக்கள் முயற்சி களையும். மக்கள் உணர்வுகளையும் சீர்குலைக்கும் முயற்சியிலும் இவைகள் ஈடுபட்டுள்ளன,

இந்தியா நூறு ஆண்டுகளுக்கு மேலாகக் குடியேற்ற ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய பெருமைமிக்க வரலாறு கொண்ட நாடு. இந்த நாட்டின் வாசகர் தளத்தை ஏகாதி

www.padippakam.com



பத்தியம் எவ்வாறு கவர்ந்தது? நிலப்பிரபுத்துவ— ஏகாதிபத்திய நலன்களின் அடிப்படையில் உருவான அரை நிலப் பிரபுத்துவ— அரைக் குடியேற்ற (காலனி) சமூகம் இங்கு உள்ளது என்பதை எல்லாரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்திய இலக்கியத்தில் கூறப்படுகிற சொத்துடைமை பற்றிய கருத்துகளை நிலப்பிரபுத்துவக் கருத்துகள் ஏற்றுக் கொண்டுள்ளன. ஒருவன் வைத்துள்ள சொத்துடைமையை வைத்து அவனது கருத்து மதிக்கப்படுவது ஏகாதிபத்திய இலக்கியத்தின் முதன்மையான கருத்துகளில் ஒன்றாகும். இக்கருத்து நிலவுடைமை பண்பாட்டோடு முரண்படவில்லை. அது போலவே இந்துப் பார்ப்பனீய அமைப்பில் குடி கொண்டுள்ள சமத்துவமற்ற நிலை பற்றிய கருத்துகள் இத்தகைய ஏகாதிபத்திய இலக்கியத்தில் காணப்படுகின்றன. மேலும் பன்முகத் தன்மையுள்ள பண்பாட்டு நடவடிக்கைகளை அழித்து ஒற்றைத் தன்மை கொண்ட பண்பாட்டு நடவடிக்கைகளை இது மேற்கொள்ளுவதால், தன்னுடைய அதிகாரத்தை மையப்படுத்த முயலும் எந்த ஓர் அரசாங்கமும் இத்தகைய இலக்கியத்தை மிக எளிதாக முன்னிலைப்படுத்தும்.

இத்தகைய இலக்கியத்தைத் 'தரமான இலக்கியமாகக்' கருத இயலாது என ஒருவர் ஒப்புக் கொள்ளலாம். இவை போலி இலக்கியங்களே ஆகும். உண்மையான இலக்கியத்துக்கும் போலி இலக்கியத்துக்கும் இடையிலான மிக நுண்ணிய பிரிவினைக் கோடு மறைந்து போய், போலி இலக்கியம் மிகத் தெளிவற்றதாக உருமாறி, உண்மை இலக்கியமும், போலி இலக்கியமும் ஒன்றையொன்று நகல் செய்து கொண்டுள்ளது: இந்தப் படைப்புகளின் பெயர்கள் என்னவாக இருந்தாலும் கூட, இவற்றில் ஏற்றிப் போற்றப்படுகிற விழுமியங்களைப் பற்றி நாம் கவலைப் படுகிறோம்.

இத்தகைய இலக்கியங்களில் உள்ள மதிப்பீடுகள் நமது உணர்வுகளின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. விதிவாதம்,நம்பிக்கை வரட்சி ஆகியவற்றை இது ஊக்குவிக்கிறது மிகவும் கவர்ச்சிகரமான, நசிவுப் போக்குடைய நடவடிக்கைகளில் ஈடுபடு கிறது. இது மனித இலட்சியவாதத்தில், மனிதனது எதிர் வினை புரியும் ஆற்றலில், பொறுப்புணர்ச்சியில், சமூக நீதிக் கருத்துகளில் உள்ள நல்ல கூறுகளை அழித்துவிடுகின்றது. எதிர் காலத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிற இளைஞர் சமூகத்தை இதுதடை செய்து விடுகின்றது.

www.padippakam.com



எனவே இது குறித்த நமது எதிர்ப்பு என்பது கொள்கை ரீதியானது. நாம் மயிர் கூச்சறிய செய்யும் பேருக்கமும் (திரில்) மிக எளிமையானதுமான மருந்துகளை விரும்ப வில்லை. வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடும் போது கிடைக்கும் பேருக்கமும், இதுவரை ஏற்படாத அளவுக்கு எதிரிகளைத் தோற்கடித்து அடையும் வெற்றியும்தான் நாம் அடையும் பண்பியலாக வேறு பட்டதும் பரந்துபட்டதுமான வெற்றி ஆகும்.

ஏகாதிபத்திய இலக்கியத்தை நாம் எதிர்ப்பதைப் பல வழிகளில் புலப்படுத்த வேண்டும். இது நீண்டகால நிகழ்ச்சி நிரல். ஏகாதிபத்தியத்தை எதிர்த்த நீண்டகாலப் போராட்டம் மட்டுமே இத்தகைய இலக்கியத்தைக் குப்பைக் கூடையில் கொட்டும். ஆனால் குறுகிய கால அளவில் இந்த இலக்கியத்தை எதிர்க்கும் எல்லா சாத்தியங்களையும் நாம் ஆராய வேண்டும். இத்தகைய இலக்கியங்கள் பெண்கள், அடக்கி ஒடுக்கப்பட்டோர், இளைஞர் ஆகியோரை மிக மோசமாகப் பாதிப்பதால் இவர்கள் எல்லாரும் கூட்டணியை உருவாக்க வேண்டும். ஏகாதிபத்திய இலக்கியத்தைத் தொடர்சசியாக விமர்சனம் செய்தல், ஏகாதி பத்திய இலக்கியங்களின் அபாயங்களை மக்கள் தெளிவாக அறியச் செய்தல், அந்த அபாயங்கள் தோன்றும் போதே அவற்றைப் பகுத்தாராய்தல் ஆகியவை நம்முடைய வழக்கமான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

**தமிழில் : சே. கோச்சடை & முனைவர் கோ. கேசவன்**

---

## மதம்

சுடாத சூரியனும்
சுற்றாத பூமியும் உண்டா?
தேயாத நிலவும்
விடியாத இரவும் உண்டா?
கலர், கலராய்க் காற்றும்
கடல் நீர் இனிப்பதும் உண்டா?
அணுக்களற்ற உயிரும்
அண்டவெளியில் மனிதனும்
உண்டா?

உண்டு எனில்!
அறிவியலில் கடவுளும் உண்டு!
பிள்ளையாரும் பால்
குடிப்பதும் உண்டு!

இனிப்பை வெறுக்கும்
எறும்புகள் இல்லை
மலர்த்தேன் குடிக்காத
மலர் வண்டுகள் இல்லை
வாழை திண்ணாக்
குரங்குகளும்
புல்லைத திண்ணும் புலிகளும்
இல்லை
குட்டி போடும் காக்கையும்
குஞ்சு பொறிக்கும் சிங்கமும்
இல்லை
மனித இரத்தம் குடிக்காத
மதங்களும் இல்லை!

○ **சோமன்**

# அனைத்து இந்திய புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மாநாட்டில் தோழர் கோ. கேசவன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை

இனிய தோழர்களே!

அனைத்து இந்தியப் புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மாநாட்டில் தொடக்கவுரை ஆற்றுவதற்குரிய வாய்ப்பை வழங்கியுள்ளமைக்கு நான் மிகவும் நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அண்மையில்— ஆறு அல்லது ஏழு ஆண்டுகட்கு முன்னால்— தமிழ்நாடு புரட்சிப் பண்பாட்டு இயக்கத்தில் நான் உறுப்பினராக இருந்ததை இங்கு நினைவு கூர்கிறேன். அந்த இயக்கம், அ.இ.பு.ப. இயக்கத்தோடு இணைந்த ஓர் அமைப்பாகும். 1980 களின் மத்தியிலும் 1990களின் தொடக்கத்திலும் எமது இயக்கம் பல்வேறு பண்பாட்டுச் சிக்கல் கள் மீது வினையாற்றியது; பல்வேறு பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தியது; புதியகல்விக் கொள்கை, சாதியும் வர்க்கமும் என்பன போன்ற முதன்மையான அம்சங்கள் மீது பல கருத்தரங்குகளை நடத்தியது. எமது இயக்கம், தோழர் கோவை ஈசுவரனை ஆசிரிய ராகக் கொண்டு **செந்தாரகை** என்ற தமிழ் இதழை முறையாகக் கொண்டுவந்தது. சிலபல காரணங்களால் எமது இயக்கம் தொடர்ந்து செயல்படாமல் போயிற்று. ஆயின் தமிழக மக்க ளிடத்தில் அது உருவாக்கிய, உருவாக்க நினைத்த புரட்சிகர உணர்வு, தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டுவரும் புரட்சி கரப் பண்பாட்டு அமைப்புகளின் நேர்மையான முயற்சிகளினால் தொடர்ந்து கொண்டு செல்லப்படுகிறது.

இத்தகைய நினைவுகளுடன் இந்த மாநாட்டை நான் தொடங்கிவைக்கிறேன். இதைச் செய்வதன் மூலம் என் கருத்து களையும் உணர்வுகளையும் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைய மாநாட்டின் முதன்மையான தலைப்பு **வல்லரசின் தாக்குதல்களும் நமது பண்பாட்டு எதிர்ப்புகளும்** (Imperialist onslaught and our cultural Resistances) என்பது ஆகும். இன்றைய உலகின் மீது வல்லரசின் தாக்குதல் **உலக மய மாதல்** போக்கின் விளைவாகும் என்பதை நாமனைவரும் அறி வோம். அந்த உலகமயமாதல் என்பது வல்லரசு நாடுகளுக்கும்

www.padippakam.com



உலக முழுவதும் உள்ள அவற்றின் சார்பு சக்திகளுக்கும் பயனைத் தரக் கூடியதாகும். இது உலகின் செல்வாக்கு மிக்க, சுரண்டல் சக்திகட்கான உலகமயமாதல் ஆகும். நமது பண்பாட்டு எதிர்ப்புச் செயல்கள், அவற்றின் இயல்பிலேயே, **தேசியத் தன்மை** கொண்டதாகும். ஆனால் இது தேசியத் தன்மை கொண்டது மட்டுமின்றி அனைத்து உலக பண்பாட்டு எதிர்ப்பு இயக்கங்களின் ஒரு பகுதியும் ஆகும். இந்த விதத்தில் இதுவும் உலகமயமாதலின் ஒரு பகுதியாகும். இந்த விதத்தில் இத்தகைய உலகமயமாதல், **ஒடுக்கப்பட்டோர்க்கான உலகமயமாதல்** ஆகும். வல்லரசுகள் தமது செயல்களை அடையாளப்படுத்துவதற்காக உலகமயமாதல் என்ற சொலலின் மீது முழு உரிமை கொண்டாடுகிறது. இத்தகைய செயல் உலகமயமாதல் என்ற சொல்லைக் கூட ஒடுக்கப்பட்டோரிடமிருந்து பிரித்துவிடுகிற முயற்சியாகும். இது மொழித்துறை மீது வல்லரசின் தாக்குதலாகவும் உள்ளது. பாரம்பரியச் சொற்களைப் பறித்துக் கொள்ளுதல், தமக்கென மட்டுமே அதைச் சூடிக் கொள்ளுதல் என்பன போன்ற உத்திகள் மொழித்தளத்தில் வல்லரசு அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் இது ஒரு பகுதி ஆகும்.

வல்லரசின் தாக்கத்தையும் நமது பண்பாட்டு எதிர்ப்பையும் சர்வதேசிய, தேசிய சூழல்களில் பொருளாதார, அரசியல், தொழில் நுட்பத் தளங்களில் வைத்துக் காண வேண்டும். இந்த நூற்றாண்டு, சோசலிசப் புரட்சி/ சனநாயகப் புரட்சி ஆகியவற்றின் நூற்றாண்டு ஆகும். அதுமட்டுமல்ல, இந்த நூற்றாண்டு இத்தகைய புரட்சிகள் பின்னடைந்த நூற்றாண்டும் ஆகும். இந்த நூற்றாண்டின் முதற் பாதியில் சோசலிசக் கருத்துருவமும் தேசிய விடுதலை ஆர்வம் கொண்ட ஜனநாயகக் கருத்துருவமும் முன்னேறி வளர்ந்தன. இந்நூற்றாண்டின் இறுதி இருபது ஆண்டுகளில் இவை ஆளும் கருத்துருவங்களாக இருந்த சமூகங்களில் இவற்றுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. இங்கு முதலாளியக் கருத்துருவம் சமூக—பாசிசக் கருத்துருவமும் வளர்ந்தன, இத்தகைய பின்னடைவுகட்கு உரிய காரணத்தை வல்லரசின் சூழ்ச்சி என்பதில் மட்டும் கண்டறிய இயலாது. அது ஒரு புறக் காரணம் மட்டுமே. இந்த நாடுகளில் செயல்பட்ட அகக் காரணங்களையும் கருத வேண்டும். சோசலிச அதிகாரத்தைத் தொடக்க காலத்தில் நிலை நிறுத்துவதற்குத் தேவைப்பட்ட அதிகாரப் போக்கு படிப்படியாகத் தளர்வடைவதற்குப் பதிலாக இறுக்கமடைந்தது; சோசலிச சமூகத்திலும் வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றாக வேண்டும் என்பதைக் கோட்பாடு ரீதியில் மறுத்தல்; அப்படி கோட்பாடு ரீதியில் மறுக்காது,

www.padippakam.com



சோசலிச சமூகத்திலும் வர்க்கப் போராட்டத்தின் தொடர்ச்சியைப் பண்பாட்டுத் தளத்தில் நிகழ்த்திய நாடுகளில் நடைமுறையில் அத்தீவிர இடதுசாரிப் பிழைகள் ஏற்பட்டன; சோசலிசத்திலிருந்து பொதுவுடைமையை நோக்கிச் செல்கையில் சோசலிச சமூகத்தில் உள்ள முரண்பாடுகளை கையாள்வதில் ஏற்பட்ட நடைமுறைத் தவறுகளினால் முதலாளியக் கருத்துருவத்தை நோக்கி மக்கள் நகர்ந்தனர். மின்னணு ஊடகங்களின் வளர்ச்சியால் ஏற்பட்ட தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திக்கொள்வதில் தங்குதடையற்ற அனுமதி கொடுத்ததால் இத்தகைய நகர்தலின் போக்கு துரிதமடைந்தது. இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னால் வல்லரசின் நேரடி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற நாடுகளில் மையப்படுத்தப்பட்ட அரசு முதலாளியத்தால் தனியார்துறை வளர்ச்சியடைந்தது. வல்லரசு நாடுகளின் பன்னாட்டுக் கழகங்கள் (Multi National Corporation) தேசம் கடந்த கழகங்கள் (Trans National Corporations) ஆகியவற்றின் துணை கொண்டு மேலும் வளர்ச்சியடையும் போக்கு பிறகாலத்தில் உருவாகித் திடப்பட்டது. இது இந்நாடுகளை மேலும் ஏகாதிபத்திய வளையத்துக்குள் ஆழ உள்ளிழுந்தன. இத்தகைய பல காரணங்களினால் சோசலிசக் கருத்துருவத்துக்கும் சனநாயகக் கருத்துருவத்துக்கும் பின்னடைவு ஏற்பட்டது. இது உலகத்தை **ஒற்றைத் துருவம்** கொணடதாக மாற்றியது என்பர். இதுவும் ஒரு விதத்தில் வல்லரசு நோக்கிலான சொற்பயன்பாடாகும். உலகில் இன்றைக்கு வல்லரசு நிலைபாட்டுக்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை என்ற கருத்திலேயே இத்தகைய ஒற்றைத் துருவம் என்ற சொல் ஆக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. சோசலிச நாடுகள் இருந்த பொழுது வல்லரசு ஆதிக்கத்தை எதிர்த்த போக்கு இருந்ததால் அப்பொழுது உலகத்தை எதிரெதிர் இரட்டைத் துருவங்கள் கொண்ட அமைப்பாக வருணித்தனர். இப்பொழுது அவை இல்லாத காரணத்தால் ஒற்றைத் துருவம் என்கின்றனர். ஆனால் இப்பொழுது சோசலிச அரசதிகார முகாம் இல்லையே தவிர, சோசலிசக் கருத்துருவம் உள்ளது. அது எவ்வளவுதான் வலிமை அடக்கப்பட்டாலும், அக்கருத்துருவமே இன்றைக்கு வல்லரசு நலத் தன்மை கொண்ட முதலாளியக் கருத்துருவத்துக்கு சரியான எதிர்க்கருத்துருவமாகவும் தீர்வுக் கருத்துருவமாகவும் உள்ளது. எனவே இன்றைக்கும் உலகம் இரட்டைக் கருத்துருவங்களின் எதிரெதிர் துருவங்களின் சேர்க்கையாகவுள்ளது.

இங்கு கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில் இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பின்னால் உருவான குடியேற்ற

படிப்பகம்

www.padippakam.com



ஆதிக்கத்தின் வடிவ மாற்றங்கள் இந்நூற்றாண்டின் கடைசி இருபது ஆண்டுகளில் சில புதிய அம்சங்களைப் பெற்றுள்ளன என்பதாகும். இக்காலகட்டத்தில் வல்லரசு, முன்னாள் குடியேற்ற நாடுகளில் சகலவிதமான துறைகளிலும் எவ்விதக் கேள்வியும் இன்றி தங்கு தடையின்றி சுரண்டிக் கொண்டு இருக்கின்றது. நாடுகள், தேச அரசுகள் என்கிற தடைகள் எல்லாம் அகற்றி உலகம் முழுவதையும் ஒரே உற்பத்தி நிலையாகவும் கருதக்கூடிய தன்மை உருவாகியுள்ளது. உற்பத்தி செய்வது ஒரு நாட்டில், விநியோகம் செய்யும் உரிமை இன்னொரு நாட்டுக்கு, நுகரக் கூடிய உரிமை பிறிதொரு நாட்டுக்கு என்கிறாற் போன்று இன்றைக்கு நிலைகள் மாறிவிட்டன. ஒரு நாட்டின் முதலாளிகள் பல நாடுகளைச் சுரண்டிக் கொழுக்க வகை செய்யும் அமைப்பு களும் பல நாடுகளில் முதலாளிகள் என்று சேர்ந்து கூட்டாகப் பல நாடுகளைச் சுரண்டிக் கொழுக்க வகை செய்யும் அமைப்பு களும் இன்றைக்கு பெருத்துவிட்டன. இவை இந்தியா போன்ற மூலதன வறுமை கொண்ட நாடுகளின் பொருளாதாரத்தின் மீது மிகவும் செல்வாக்கு செலுத்துகின்றன. இங்கு உருவாக்கப்படும் கொள்கைக் குறிப்புகள் (Policy Notes) பெரும்பாலும் இத்தகைய பன்னாட்டுக் கழகங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களால் மூலவரைவு (Priliminary Draft) செய்யப்பட்டவை யாகும் ஒடுக்கப்பட்ட ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ள கனிவளங்களையும் உடல் உழைப்பையும் மிக மலிவான விலையில் பயன்படுத்திக் கொளவ தற்கேற்ற திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த நாடுகளின் தொழில் துறையையும் வேளாண்மைத் துறையையும் தமக்கு உகந்தாற்போல இவை செதுக்கி அமைக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில் உருவாக்கித்திடப்பட்ட இன்னொரு முக்கிய அம்சம்,சேவைத்துறையில் இத்தகைய அன்னிய நிறுவனங் களின் ஊடுருவலும் மேலாதிக்கமும் ஆகும். வல்லரசு நாடுகளின் நிறுவனங்களுக்கு தொழிற் சாலையிலும் வேளாண்மைத் துறையி லும் கிடைக்கும் இலாபம் குறைந்துகொண்டே வருகிறது. அதை ஈடுகட்ட இத்தகைய அன்னிய நிறுவனங்கள் சேவைத் துறையி லும் நுழைய விரும்புகின்றன. இதுமட்டுமல்ல சேவைத் துறையில் ஈடுபடுவதன் மூலம் இந்திய மக்களோடு அன்னிய நிறுவனங்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் முடியும் என்பதும் வலு வான ஒரு காரணம் ஆகும். கடந்த 5 ஆண்டுகளாக நமது நாட்டில் சேவைத் துறைகளில் அன்னிய நிறுவனங்களின் முதலீடு அதிகரித்துள்ளது. வங்கி, காப்பீடு, தொலைத் தகவல் தொடர்பு,

www.padippakam.com



கல்வி, அறிவியல்— தொழில் நுட்ப ஆராய்ச்சி, மருத்துவம் போன்ற சேவைத்துறைகளில் அன்னிய நிறுவன முதலீடு அதிகரித்துள்ளது. இவை பெரும் பாலும் அரசின் நேரடியான கட்டுப்பாட்டிலும் அல்லது அரசினால் மேற்பார்வை செய்யப்பட்ட தனியார் துறையின் கட்டுப்பாட்டிலும் இதுவரை இருந்தன. இவற்றில் அரசின் கட்டுப்பாடுகளும் முதலீடுகளும் பெரிதும் குறைந்து போனதை அடுத்து இவற்றில் தனியார் துறையின் முதலீடு அதிகமாகி இவற்றைப் படிப்படியாகத் தனியார் மயமாக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. இவை மட்டுமின்றி, இந்தியத் தனியார் துறையுடன் போட்டியிடுவதற்கோ இணைந்து செயல்படுவதற்கோ அந்நிய நிறுவனங்களுக்கு அனுமதி வேண்டும் எனக் கோரப்பட்டது. இப்போது இது ஒரு நிபந்தனையாக விதிக்கப்பட்டு பல ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இவற்றின் விளைவாக 1985கள் முதறகொண்டே இந்தியாவில் **பொருளாதார தாராளமயத்தையும் ஒடுக்கும் சக்திகளுக்கான உலகமயமாதலையும்** பெருகியதைக் காணலாம். இத்தகைய போக்கை தொடக்ககாலத்தில் சில முதலாளிகள் எதிர்த்தனர். சில அரசியல் கட்சிகளும் எதிர்த்தன. ஆனால் பின்னாளில் இதை எதிர்க்கிற முதலாளிகள் இல்லாமல் போய் விட்டனர். மேலும் மேலும் அந்நிய முதலீட்டுச் சலுகைகளைப் பெறத் துடித்துக் கொண்டு இருக்கின்றனர். பாரதீய சனதாக்கட்சி முதல் பாராளுமன்ற வாதப் பொதுவுடைமைக்கட்சி ஈறாக எல்லா அரசியல் கட்சிகளும் எதிர்க்கட்சியாக இருக்கும்காலத்தில் இவற்றை எதிர்ப்பதைப்போல தம்மைக் காட்டிக்கொண்டாலும் ஆளும் கட்சியாக வாய்ப்புப் பெற்ற காலங்களில் இவற்றின் பாதுகாவலர்களாகத் தம்மைக்காட்டிக் கொண்டன.

இன்றைக்குப் பத்தாண்டுகள் கழித்து இத்தகைய பொருளாதாரப் போக்குகளின் விளைவுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. இத்தருணத்தில் **மனித நேயத்துடன் கூடிய உலகமயமாதல்** (Globalisation with a Human face) என்றபோக்கை மிகவும் கவனமாக முன்வைக்கின்றன. மாட்டுக்கு வைக்கோலைக் கொடுத்து பாலைக் கறக்கும் இத்தகைய தந்திரம் வல்லரசு ஆதிக்கத்துக்குப் புதியது அன்று, இது அதன் தொடர்ச்சியான செயல் தந்திரமாகவே உள்ளது. அடிப்படை மக்களுக்கு சனரஞ்சகக் கவர்ச்சித் திட்டங்கள் (Populism for the Basic Masses), தரகு முதலாளிய மற்றும் நிலப்பிரபு சக்திகளுக்கு அரசியல்—பொருளாதார சலுகைகள் (Reforms for the Dependent forces); வல்லரசின் ஆதிக்கத்தை எதிர்க்கும் சனநாயக—தேசப்பற்று சக்திகள் மீது

www.padippakam.com



அடக்குமுறை (Repression on ther Democratic and Nationalist forces) என மூன்றடுக்கு உத்தியை நீண்டகாலமாகவே வல்லரசு கடைப்பிடித்துக்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே மனித நேயத்துடன் கூடிய உலகமயமாதலைக் காண வேண்டியுள்ளது.

வல்லரசின் இத்தகைய தாக்குதல்கள் பண்பாட்டுத் துறையின் மீது குவிமையப்படுட்டுள்ளன. இவை **பண்பாட்டு வெடி குண்டுகளாகும்.** இவை மக்களிடத்தில் கண்ணிவெடிகளைப்போல விதைக்கப்பட்டு வல்லரசின் விருப்பத்துக்கு ஏற்ப வெடிக்கப் படுகின்றன. பத்திரிகைகள். தொலைக்காட்சி ஆகிய ஊடகங் களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் இத்தகைய வல்லரசின் ஆதிக்கம் செயலபடுகின்றது.

வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள தகவல் தொடர்பு சாதனங்களின் ஆணைகட்டு ஏற்பத் தனிநபர் உணர்வுகள் மாற்றி அமைக்கப்படுகின்றன. மக்களின் வாழ்க்கை முறை களையும் உலகக் கண்ணோட்டத்தையும் மாற்றி, புதிய மதிப் பீடுகளை வழங்குகின்றன. வாழ்வதில் எவ்வித நெறிமுறையும் தேவையில்லை, வாழ வேண்டும் என்பதே முதன்மையாகும் என்ற புதிய மதிப்பீடு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். வலுத்தவனே வாழ்க்கையில் வெற்றிபெற இயலும்: வாழ்வுக்கான போராட்டம் என்பதே தேவையில்லை; வல்லாண்மைக்கு அடிபணிதலே வாழ்வுக்கானப் பாதை; போராட்ட உணர்வின் மீதான மக்களின் தார்மீகப்பிடிப்பை முற்றாக அறுத்தெறிதல் ஆகிய புதிய மதிப் பீடுகள் வழங்கப்படுகின்றன.

இத்தகைய போக்கு கல்வித்துறையில், கலை இலக்கியத் தளத்தில், மொழித்தளத்தில், சமூக உறவுகளில் வலிந்து செலுத் தப்பட்டு மக்கள் தம் பழைய வாழ்க்கையை இழந்து புதிய வாழ்க் கையைப் பெற இயலாமல் அந்தரத்தில் தவிக்கவிடப்பட்டுள் ளனர்.

இது, கல்வித்துறையில் செயல்படுவதன் மூலம், தொழில் நுட்ப அறிவு கொண்டதும் சமூக நோக்கமற்றதுமான ஒரு மந்தையை உருவாக்க முனைந்துள்ளது.

இது, கலை இலக்கியத்தில் அரை ஆபாசத்திலிருந்து ஆபாசத்தை நோக்கிய விரைவுப் பாய்ச்சலை உருவாக்கி உள்ளது. குறிப்பாக இசையில் சமூக வெறித்தனத்தையும் பாலியல் உணர்வுத் தூண்டல்களையும் பல கருவிகளை ஒரே காலத்தில் பயன்படுத்தி, பிரமிக்கத்தக்க விதத்தில் கலந்து கொடுக்கிறது.

www.padippakam.com



இது மக்களின் மொழியைச் சிதைக்கிறது. குறிப்பாக நீண்டகாலமாகத் தொடர்ந்து இருந்து வரும் சொற்கள் தம் பழைய பொருளை இழந்து புதிய, தலைகீழான சொற்களையும் பெற்றுக் கொள்ள நேர்ந்தது. பாரம்பரிய பெயர்ச் சொற்கள் மறைந்து விட்டன. ஒழுங்கற்ற புதிய இலக்கணத்தைத் திணிக்க முயல்கிறது. இவற்றின் விளைவாக வல்லரசு தமக்கென்ற மாதிரி மொழியைப் பயன்படுத்திக் கொள்ளத் துடிக்கின்றது.

ஆண் பெண் உறவு குறித்த சமத்துவ மதிப்பீடுகள் சீர் குலைக்கப்பட்டு, அராசக மதிப்பீடுகள் முன்வைக்கப்படுகின்றன. பாரப்பரிய நிலவுடைமை முறையிலான ஆணாதிக்க மதிப் பீடுகளை சீர்படுத்தும் நோக்கில் இவை முன்வைக்கப்படுகின்றன.

நகர்ப்புற மக்களிடத்தில் நுகர் பொருள் பண்பாட்டு மயத்தை உருவாக்கி, வாழ்க்கை என்பது நுகர் பொருள் பயன் பாட்டுக்கே என்ற நிலையை அடையச்செய்துள்ளது. அடிப்படை மக்களிடத்தில் இத்தகைய சாதனங்கள் குற்ற உணர்வையும் தாழ்வு மனப்பான்மையையும் உருவாக்கியுள்ளன. நடுத்தரவர்க்க மக்களிடத்தில் குறிப்பாக அமைப்பு ரீதியான பணிகளில் ஈடுபட்டுள்ள நடுத்தரவர்க்க மக்களிடத்தில் வாழ்வின் மீதான ஆர்வத்தின் அடிப்படையில் சமரச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. எதிலும் இணங்கிப் போகவும் தமது காரியத்தில் மட்டுமே கண்ணாயிருக்கவும் இவை கற்றுக் கொடுக்கின்றன. அமைப்பற்ற உதிரித்தொழிலாளர்களிடத்தில அடியாள் பண்பாட்டையும் உதிரித்தனத்தையும் உருவாக்கியுள்ளன.

தொலைத்தொடர்பு சாதனங்களின் மூலம் வல்லரசு இன்றைக்குத் தம் ஆளுகையை நிலைநிறுத்திக் கொண்டு இருக் கிறது. இது சுதந்திரக் கட்டுப்பாடுகளற்ற சேவைத்துறை என்பதன் பெயரில் செய்யப்படுகிறது. இது ஒரு பண்பாட்டுப் போர் ஆகும். இது இராணுவப் போரைவிட மிகவும் மோசமான தாகும். ஒரு வெடிகுண்டு சத்தமும் கேட்கப்படாமலே சோவியத் ரசியா வீழ்ச்சியடைந்ததை இங்கு நாம் உணர வேண்டியுள்ளது; இத்தகைய பண்பாட்டுப்போர் இன்றைக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்கா நாடுகளில் நடந்து கொண்டிருக்கிறது. இது சகல துறைகளிலும் நீக்கமற ஊடுருவியுள்ளது. இதைக் கண்டறிவதும் வெளிப்படுத்துவதும் இம்மாநாட்டின் நோக்க மாகும்.

இதை நிறைவேற்றுவது மட்டுமல்ல இம்மாநாட்டின் நோக்கம். வல்லரசின் பண்பாட்டுத்தாக்குதலை எதிர்கொள்வது

படிப்பகம்

www.padippakam.com



எவ்வாறு என்பதைக் கண்டறிவதும் இதற்கான மாற்றுப் பண்பாடுகளைக் கண்டறிவதும் இதன் நோக்கமாகும்.

இத்தகைய பண்பாட்டுத் தாக்குதல்களை நாம் இன்றைக்கு எதிர்க்கவில்லையெனில் நம்மைச் சுற்றியுள்ள பிரபஞ்சமே நமக்கு அன்னியமாகிவிடும். இதற்கான எதிர்ப்புக் கூறுகளை முதலில் நாம் தொகுத்துக்கொள்ள வேண்டும். நமக்கு முந்தைய மரபுகளிலே ஆதிக்க மரபும் இருக்கிறது; ஆதிக்க எதிர்ப்பு மரபும் இருக்கிறது. இதில் ஆதிக்க எதிர்ப்பு மரபுக்கூறுகளைத் தொகுத்துக் கொள்ள வேண்டும். நமது தமிழ்ப்பாரம்பரியத்திலேயே உள்ள பழமொழிகள், கதைகள், கவிதைகள், கலை வடிவங்கள், சமூக நம்பிக்கைகள் ஆகியனவற்றில் இத்தகைய எதிர்மரபுகள் அடங்கியுள்ளன. ஆண்களின் பாலியல் ஆதிக்கத்தை எதிர்த்து பல நாட்டுப்புறக் கதைகள் உள்ளன. சாதிய ஆதிக்கத்தை எதிர்த்த சித்தர்பாடல்கள், கதைப்பாடல்கள் பலவுள்ளன. சமய அடிப்படையிலான அதிகாரத்தைக் கிண்டல் செய்யும் பாடல்களும் எதிர்த்த நிகழ்வுகளைப் பதிவு செய்த கல்வெட்டுகளும் இருக்கின்றன. தெலுங்கு தேசிய இன அதிகாரத்தைக் கிண்டல் செய்யும் பள்ளுப்பாடல்களும் பிரிட்டன் அதிகாரத்தைக் கிண்டல் செய்து எதிர்க்கும் நாட்டுப்பாடல்களும் நிரம்பவுண்டு. நமது பாரம்பரியத்திலேயே ஆதிக்க எதிர் மரபுக்கூறுகள் இருப்பதைத் தொகுத்துக்கொள்ளும்போது வல்லரசின் பண்பாட்டுத்தாக்குதல்களை எதிர்ப்பதற்கான வடிவங்களை நமது வரலாற்றிலேயே நாம் கண்டறிய இயலும். நமது எதிர்மரபுக் கூறுகளை வளர்ப்பதன் மூலம் போராட்ட உணர்வுகளை அழுத்தம் பெறச் செய்யலாம்.

இது மட்டும் போதாது. நமது இன்றைய எதிர்ப்பு பாரம்பரிய எதிர்ப்பின் தொடர்ச்சி என்ற விதத்தில் இது சரியாக அமையினும், இது போதாது. இத்தகைய எதிர்ப்பை, சரியான தளத்திலும் நடத்த வேண்டும் என்பது காலத்தின் தேவை. இவற்றை இந்தியா முழுவதும் மையப்படுத்தி நடத்தவேண்டும் என்பதோ தமிழ் நாடு தழுவியதாக நடத்த வேண்டும் என்பதோ அல்லது சாத்தியமான ஒரு சிறு தளத்தில் மட்டும் நடத்தலாம் என்பதோ அந்தந்த நிலைகளைப் பொறுத்த அம்சமாகும். இவை தன்னெழுச்சியாகக்கூட மக்களின் உடனடித் தேவையிலிருந்து கூட ஏற்படலாம் அப்படி ஏற்படும் அதைத் திட்டமிட்டதாக வளர்த்தெடுக்க வேண்டுமேயொழிய அதிலிருந்து ஒதுங்குதல் கூடாது. இத்தகைய போராட்டங்கள் இரண்டு அம்சங்களை நோக்கங்களாகக் கொள்ள வேண்டும்.

www.padippakam.com



1) வல்லரசு பண்பாட்டுத்தளத்தில் உருவாக்குகிற மேலாதிக்கத்தில் சிதைவுகளையும் உடைவுகளையும் ஏற்படுத்தல் வேண்டும்; வாழ்க்கை பற்றி அது உருவாக்கியுள்ள பிம்பங்களை உடைக்க வேண்டும்.

2) வல்லரசுக்கு எதிரான குறியீடுகள், அடையாளங்கள் ஆகியனவற்றை நாம் உருவாக்க வேண்டும். எளிமை, வாழ்வின் மீதான ஆர்வம், சகமனிதரை நேசித்தல், ஆதிக்க எதிர்ப்புணர்வு, போராட்டவுணர்வு ஆகியன பற்றிய குறியீடுகளையும் பிம்பங்களையும் உருவாக்குதல் வேண்டும்.

நமது பாரம்பரிய ஆதிக்க எதிர்ப்பு மரபுகளிலிருந்து போராட்ட ஆக்கக் கூறுகளை உருவாக்கிக் கொள்ளும் பொழுதே நாம் உலகளாவிய எதிர்ப்பு மரபுகளிலிருந்தும் பலவற்றைக் கண்டறிய இயலும். இன்றைக்கு வல்லரசு ஆதிக்கநிலை உலகளாவியதாக இருக்கும் பொழுது, தவிர்க்க இயலாத வகையில் வல்லரசு எதிர்ப்பு நிலையும் உலகளாவியதாகவே இருக்கிறது. இன்றைக்கு உலகின் பல பகுதிகளில் ஒடுக்குதலுக்கு எதிரான விடுதலைப் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் கறுப்பின மக்களும் பல சிறுபான்மை மக்களும் சனநாயக உரிமை கட்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் மிருகங்களைவிடக் கேவலமான முறையில் மனிதர்களை நடத்தும் கொடுமையை எதிர்த்தப் போராட்டம் நடந்து கொண்டு இருக்கிறது. பர்மாவில் அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து மாணவர் கிளர்ச்சிகள் நடக்கின்றன. இலங்கையில் சிங்களப் பேரினவாத அரசு அதிகாரத்தை எதிர்த்த போர் நடந்து கொண்டு இருக்கின்றது. இவற்றிலும் இவை போன்ற பிறவற்றிலும் ஆதிக்க எதிர்ப்பு பண்பாட்டுக் கூறுகளைக் கண்டறிந்து அவற்றைக் கைப்பற்றவும் வேண்டும். இவற்றிலிருந்து நாம் புதிய போராட்ட வடிவங்களை உருவாக்க இயலும்.

இன்றைய நமது எதிர்ப்புப் போராட்ட வடிவம் நீர்த்துப் போயுள்ளது என்பது உண்மை. கடையடைப்பு, மறியல், ஊர்வலம்,' ஆர்ப்பாட்டம் என்பனவெல்லாம் நம்மை நாம் சூடேற்றிக் கொள்வதற்கும் ஓரளவு பிரச்சாரக்திற்கும் மட்டுமே பயன்படுகின்றன. இத்தகைய வடிவங்களை எதிர்கொள்ளும் முறையையும் அதிகார சக்திகள் கற்றுக் கொண்டிருக்கின்றன. இக்கட்டத்தில் அதிர்ச்சி மதிப்பு, கிளர்ச்சி மதிப்பு ஆகியவற்றை உருவாக்கக் கூடிய போராட்ட வடிவங்களும் தேவை. இதற்கு **பெரியார் ஈ. வே. ரா.** அவர்கள் நடத்திய போராட்டங்களிலிருந்து நாம்

www.padippakam.com



கற்றுக் கொள்ளமுடியும். இத்தோடு அமையாமல் நாம் செய லூக்க மிக்க வடிவங்களையும் கையாளவேண்டும். வல்லரசின் தொழில் நுட்பப் பேரரசின் ஆற்றல்களே அழிப்பதற்குரிய விதத்தில் மக்களைப் பெருமளவில் ஈடுபடுத்துவதற்கான போராட்ட வடிவங்கள் கையாளப்படவேண்டும். இவ்வாறு கண்டறிதல் இந்த மாநாட்டின் இன்னொரு நோக்கமாகும் எனக் கருதுகிறேன். இங்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுதலோடு இம்மா நாட்டைத் தொடங்கி வைக்கிறேன்:

**தோழர் ஞானேசுவரர் கீர்த்தி** ஆந்திரப் புரட்சிகர எழுத் தாளர் சங்க உறுப்பினர். கல்விச் சுரண்டலை எதிர்த்துப் போராடிய பொழுது மரணமடைந்தார். அவரது மரணவாக்கு மூலத்தில் ஒரு பகுதி (8-2-80).

''நான் ஒரு கவிஞன். புரட்சி எழுத்தாளர் சங்க உறுப் பினர். மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை... கதை, கவிதை, நாடகம், வீதிநாடகம், நாவல்கள் மூலம் நாங்கள் அறியச் செய்கிறோம்.

எங்கள் பகுதி மக்களுக்கு, சரத் உயர்நிலைப் பள்ளி நிர்வாகி கொண்டையா இழைக்கும் கொடுமைகளை எடுத்து வைத்து அவனது கல்வி வணிகத்துக்குத் தடையாக இருந்தேன். எனவே என்னை நிரந்தரமாக அழிந்து விட நேற்று இரவு பெட்ரோலை ஊற்றி என் மீது தீ வைத்து விட்டான்.

நான் இறக்க விரும்பவில்லை. வாழ விரும்புகிறேன். நான் இன்னும் செய்ய வேண்டியது, ஏராளமாக உள்ளது''

ஆம்! தோழர் ஞானசுவரர் கீர்த்தி இறக்கவில்லை; இருக்கி றார். இதோ! அவர் சார்ந்த ஆந்திர புரட்சிகர எழுத்தாளர் சங்க மாக இருக்கிறார். அது சார்ந்த அனைத்திந்திய புரட்சிகரப் பண் பாட்டு அமைப்பாகவும் இருக்கிறார். ஆதிக்க எதிர்ப்புப் போரில் தன்னுருவை இழந்த அந்தக் கவிதைச் சுடரோனின் ஒளியில் நாம் பயணம் செய்வோமாக! நன்றி.

---

கூட்டாண்மை, சோசலிசம் என்பன தனிநபரின் நலன் களைக் கூட்டத்தின் நலன்களுடன் ஒன்றிணைக்கிறது; அவை தனிநபரின் நலன்களை மறுப்பதில்லை. சோசலிசம் தனிநபரின் நலன்களிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள இயலாது. சோசலிச் சமூகம் மட்டுமே தனிநபர் நலன்களை முற்றிலுமாக நிறைவு செய்யக்கூடியதாகும். அதற்கும் மேலாக, சோசலிச சமூகம் மட்டுமே தனிநபரின் நலன்களை உறுதியாகக் காத்திடக் கூடியது.

— **ஸ்டாலின்**

www.padippakam.com

# தவிர்த்திருக்க வேண்டிய இழப்பு

# தோழர் அரிராமன்



ஐந்தாண்டுகளுக்கு முன்னால் மறைந்தத் தோழர் குமரேசன் அவர்கள் எழுதிய ஒரு கடிதத்தில், ''நமது அரசியலை ஏற்றுக் கொள்ளக் கூடிய நாட்டுபுறப் பாடல்களில் ஆழ்ந்த புலமையடைய இளைஞர் இருக்கிறார் மக்கள் கலை மன்றத்திற்குத் தேவையான புதிய புதிய நாட்டுப்புற மெட்டுகளில் நமது அரசியல் கருத்துகளை கொண்டுச் செல்ல உறுதுணையாக இருப்பார்'' என்று எழுதியிருந்தார். தோழர் அரிராமன் பற்றி குமரேசனின் கணிப்புச் சரியாகவே இருந்தது. ''மக்கள் பண்பாட்டு'' இதழ்களில் தொடர்ந்து மக்களின் எதிர்ப்பு இலக்கியம்'' பகுதிக்கு தனது பங்களிப்பை அரி செய்து வந்தார். மக்கள் பண்பாட்டுப் பேரவையின் உறுப்பினராக அதன் தொடக்கம் முதல் இருந்தார் அரி! அவர் கடந்த 16-5-96 அன்று மின்சார விபத்தில் திடீரென்று சென்னையில் மரணமடைந்தார். மக்கள்பண்பாடு ஆசிரியர்குழு மறைந்த தோழருக்கு தனது சிவப்பஞ்சலியை செலுத்துகிறது! அவரவது பிரிவால் வாடும் அவரது துணைவியார் தோழர் ஜோதிராணிக்கும், குடும்பத்தினருக்கும் ஆழ்ந்தஇரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தோழர் அரிராமன் நெல்லை மாவட்டம், ஒட்டபிடாரம் வட்டத்திலுள்ள பரிவல்லிக் கோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர் சிறுவிவசாயியின் 5 பிள்ளைகளில் மூத்தவர். அவர் குடும்பத்தில் கல்லூரி படிப்புப் படித்தவர் இவர் மட்டுமே. வ. உ. சி. கல்லூரியில் இளங்கலைத் தாவரவியல் படித்துக் கொண்டிருந்த பொழுது கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சேர்ந்த பேராசிரியர் சிவ சுப்பிரமணியம் அவர்களால் பொதுவுடமை அரசியல் அரங்கிற்குக் கொண்டு வரப்பட்டார் இந்திய பொதுவுடமைக் கட்சியின் மாணவர் அமைப்பான AISF யின் கல்லூரி கிளைச் செயலாளராக இருந்து பொதுவுடமைக் கருத்துக்களை மாணவர்களிடம் பிரச்சாரம் செய்தார். நாட்டுப்புற இலக்கியத்தில் M.Phil பட்டம் பெற்றார். இந்த ஆண்டுகளில் கடினமாக உழைத்து ஏராளமான நாட்டுப்புறப் பாடல்களை திரட்டினர். நாட்டுபுற மெட்டு

களில் புதிய சமூக கருத்துக்களைக் கொண்ட பாடல்களை எழுதி தானே பாடி கல்லூரிகளில் கலை நிகழ்ச்சிகள் நடத்துவார்.

1990 களில் பழைய கல்லூரி நண்பர்கள் மூலம் மார்க்சிய லெனினிய இயக்கங்கள் அரிக்கு அறிமுகமாயின. சாதியம், உழவர் புரட்சி, இலக்கியம் கோட்பாடு போன்ற பலவற்றிலும் திரிபுவாதக் கட்சிகளிடம் இருந்து மாறுபட்டார். தோழர் குமரேசன் அவர்கள் அரியை அரசியல் ரீதியாக வளர்த்தெடுப்ப தில் முக்கிய பங்கு வகித்தார். குமரேசனுடன் இணைந்து நக்சல் பாரி அரசியலை அரி அப்பகுதியில் பரப்பினார். !முன்னோடி இதழ்கள் விற்பது முதல் கத்தரின் விடியோ நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வது வரை அவர் பல பணிகளைச் செய்தார். பாரதிதாசன் பேரவையை குமரேசன் ஆரம்பித்த போதும், 'மின்னல்' என்ற கையெழுத்து ஆரம்பித்த போதும் அரி அவருக்கு உறுதுணை யாக இருந்தார். இக்காலத்தில் படிப்பு முடித்திருந்த அரிக்கு நிரந்தர வேலை ஏதும் கிடைக்கவில்லை. டியூசன் சொல்லிதருவது முதல் மோட்டார் மெக்கானிக் வரை கிடைத்த வேலைகள் செய்து சுயமாக வாழக்கடுமையாக வாழ்க்கையில் போராடி னார்.

1994 இறுதியில் சென்னையிலுள்ள அம்பத்தூரில் தனியார் மெட்ரிகுலேசன் பள்ளியில் ஆசிரியராக சேர்ந்ததுடன், டாக்டர் பட்டம் ஆய்விற்காக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் சேர்ந்து படித்தார். குடும்பத்தின் வறுமை, இதர சுமைகளால் அவரால் இயக்க வேலைகளில் அதிகமாக ஈடுபட இயலவில்லை. இருப்பினும் சொல்வேறு செயல்வேறாக இல்லாமல் தாழ்த்தப் பட்ட பள்ளர் வகுப்பைச் சேர்ந்த தோழர் அரி பல எதிர்ப்பு களுக்கு இடையே பறையர் வகுப்பைச் சேர்ந்த தோழர் ஜோதி ராணி அவர்களை காதலித்தும் புரட்சிகர திருமணம் செய்து கொண்டார். மக்கள் பண்பாடு இதழுக்கு தொடர்ந்து பங்களிப்பு செய்தார். இறப்பதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு ஏகாதிபத்திய தன்னார்வ குழுக்கள் கலைகளை சிதைப்பதை பற்றியும் உயிரற்றதாக முடக்குவது பற்றியும் வருத்தப்பட்ட தோழர் அதைப் பற்றி நீண்ட கட்டுரை ஒன்றையும் எழுதித் தந்தார். (அடுத்த இதழில் வெளிவரும்) சென்னை ஆய்வுவட்டம் என்ற ஆய்வுக் குழுவில் அரிராமன் முக்கிய பங்கு வகித்தார்.

மொட்டு மலந்து மலராகும் தருணத்தில் உதிர்வதுபோல தான் உழைத்தது சேகரித்த அறிவை சமுதாயத்திற்கு பயன்படுத் தும் முன்பே கவனகுறைவால் உண்டான மின்விபத்தில் மாண் டார். இளம் வயத்தில் அவரது பிரிவானது மிகப்பெரிய இழப் பாகும். தவிர்த்திருக்க வேண்டிய இழப்பாகும்!

○ நடராசன்.

www.padippakam.com

சிறுகதை

# புயல்

□ அல்லம் ராஜய்யா
தெலுங்கானா 1993

''சாவித்திரி... எங்கே போயீட்டே'' என்றவாறே தூக்கத்தில் இருந்து நாகம்மா எழுந்தாள். மூக்குத்தியை சரி செய்துக் கொண்டும்... கூந்தலை நகங்களால் கோதிக் கொண்டும்... கொட்டாவி விட்டபடி, ''எங்கே போயிட்டியேடி'' என்றுக் மறுபடியும் கத்தினார்.

சாவித்திரி அரக்க பரக்க எழுந்தாள். இன்னும் இருட்டாவே இருந்தது.

''எம் புள்ளைக்கு இன்னும் விடியல்லியா? ராத்திரி எல்லாம் வெறுமனே பாட்டுகள்ள பாடிக்கொண்டு அலைபிறதும் ரொம்ப நேரம் கட்டிலில் படுத்திருப்பதும்...... எழுப்பி கொஞ்சம் கழனிக் கும் போகச் சொல்லு'' என்றாள்.

''ஆனா... ராத்திரி அவர் வீட்டுக்கே வரலை அத்தை'' பயத்துடன் மருமகள் பதில் அளித்தாள்.

''முழுசா அவன் கெட்டுப்போயிட்டான். பெண்டாட்டிமீது பாசம் இல்லை. வேலைவெட்டியும் ஒன்னுமில்லை. இந்த குடும்பம் பாழாய் போகட்டும். இனி என்னால் ஆகாதும்மா பெரியவன் ஏதோ நாலு ரூபாய் சம்பாதித்துக்கொண்டு வருகிறேன் என்று போயிட்டான். இவன் இப்படி முழுசா பாழாய் போயிட்டான்'' கட்டிலை தூக்கியவறே நரசம்மா முணுமுணுத்தாள்.

சாவித்திரியின் மனம் நொந்தது. இனி இரவு தூங்கும் வரையில் ஓயாமல் அத்தையின் வாய் திட்டிக்கொண்டு இருக்கும் தன்னுடைய புருசன் மொகிலிக்கு இதில் எதுவும் கவனமே இல்லை இந்த குடும்பம்மெல்லாம் எதற்கோ? தனக்கு அர்த்தப் படுவதில்லை. புருசன் எதற்கு இப்படி அலைவானோ எவ்வளவு சிந்தித்தாலும் தனக்கு புரிகிறதில்லை. ஆனால் மொகிலிப் பாட்டு பாடினால், அது மட்டும் அவளை உலுக்கி உலுக்கி எடுத்துவிடும்.

கக்கேசு கிராமத்துக்கு போன, சாம்பய்யா இருமலுடன் வந்தான். காலடிகளின் சத்தமும், இருமலும் தவிர, அவர்

www.padippakam.com



இருளின் நிறத்தில் கறுப்பாக இருந்தார். மேலும் அவர் எப்போதும் சட்டை உடுத்தியது கிடையாது.

''ஏண்டீ! மொகிலி கழனிக்கு போயிட்டானா? சிறியவன் எருதுக்கள விரட்டிட்டுப் போயிட்டானா இல்லையா. பத்து மணிக்குள் எருதுகள் சோர்வடைந்து விடும். அதுகள அவுத்து விட்டா கொஞ்சம் புல்லாவது சாப்பிடும்... நிலத்தை இன்றும் உழல்லை. நாத்து வளர்ந்து போச்சி. முத்தி போய் கொண்டிருக்கிறது'' என்றவாறு மறுபடியும் இருமல் வந்து துப்பினார்.

''உன் மகன் ராத்திரி வூட்டுக்கே வரலை'' என்றார் நரசம்மா கைகளை ஆட்டியவாறு.

''என்னால முடியாது. நல்லவங்களுக்கு எல்லாம் ஆண்டவன் சாவு கொடுக்கிறான். எனக்குதான் ;சாவு வரலை...'' இருமல் அவரைப் பேச அனுமதிக்கவில்லை.

''நீ பெரிய மகன் கிட்டே போய் ஆஸ்பத்திரியில் இன்னும் காட்டவில்லை... தள்ளி தள்ளி போட்டு உன் உயிருக்கு நீயே உலை வைத்துக் கொள்கிறாய். ரூபாயை நாம சம்பாதிக்கிறோம். ரூபாய் நம்மள சம்பாதிக்கலை... கடனோ கிடனோ செய்துட்டு அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்... பெரிய வீரா கடவுளு... நாம்ம இருநூறு செலவு செய்து அந்த கடவுளுக்கு பூசை செய்தோம். ஆனாய் கொஞ்சமும் கம்மி ஆகலை'' நரசம்மா இப்படி புலம்பிக் கொண்டே சிறிய மகன் படுத்திருந்த கட்டிலை பார்த்தாள். சிறிய மகன் திருப்பதி அங்கு இலலை.

''இந்த கழுதை மகன் எங்கு போயிட்டானோ'' நரசம்மா.

சாவித்திரி இரவில் சமைத்த பாத்திரங்களைக் கிணற்று அருகில் கொண்டு சென்று கழுவுகிறாள். ஒரு காதை அத்தை, மாமனார்களுடைய பேச்சுகளின் மீதும் வைத்திருந்தாள்.

அப்பொழுது கிழக்கே கதிரவனின் கதிர்கள் பரவி வெளிச்சமாகி பொழுது விடிந்தது. மரங்களில் இருந்து பறவைகள் கூட்டம் கூட்டமாக பறந்து போகின்றன. இது வரைக்கும் ஊர் ரொம்பவும் சந்தடியாக இருந்திருக்க வேண்டும். மாடு மேய்ப்போரின் கூச்சல்கள்...மாடுகளின் அம்மா என்ற கதறல்கள்... எருமைகளின் கால் சத்தங்கள் இவைகள் எதுவுமே கேட்கவில்லை. மனிதர்கள் நடமாட்டம் இல்லை. ஊர் முழுவதும் அமைதியாக இருந்தது. ''ஊராருக்கு என்ன ஆச்சு... அப்பப்பா!'' என்று நரசம்மா வெளியே வந்தாள்.

www.padippakam.com



திடீரென்று கூச்சல்களும், முழக்கங்களும் கோமுட்டி செட்டியினுடைய கொட்டடிகளில் இருந்து எழுந்தன.

''உழுபவனுக்கே நிலம் சொந்தம்''

''கிராமங்களில் உள்ள போலிஸ் முகாம்களை உடனே அகற்று!''

''பண்ணையார்களின் ஆதிக்கத்தை நசுக்குவோம்''

நேற்று இராமய்யாபள்ளி கிராமத்திலிருந்து உழவர்கள் வந்ததுநரசம்மாவின் நினைவுக்குவந்தது. இதற்குள் சாவித்திரியும் சாம்பய்யாவும் வாசலுக்கு வந்தார்கள்.

அப்பொழுது தொந்துரு அயிலய்யா கிழித்த ஆடைகளுடன் மார்பு மீது அடித்துக்கொண்டு ஏதோ பாட்டுப்பாடத் தொடங்கினான். அது ஒரு நாட்டுப்புறப் பாடல். அவனுடைய தலைமுடிகள் சிதறிக் கிடந்தன: அவன் மகிழ்ச்சியாக குதியாட்டம் போட்டான்.

''அடேய்... அயிலய்யா! என்னாச்சு!'' நரசம்மா மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு கேட்டாள்.

''ஓ நரஸ்வா... உனக்கு தெரியாததா என்ன? விவசாய கூலிகள் கூலிகேட்டு பந்த் செய்கிறார்கள். ஏர் பிடிக்க போவதில்லை. நாற்றம் காலும் பந்த். எல்லா வேலைகளும் பந்த் பசுக்களும், எருமைகளும் காவல்காரர்கள் இல்லாமல் கொட்டடியில்தான். இன்னிக்கு பந்த்...பந்த்... அண்ணலுக்கள் வந்தார்கள்'' என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டான்.

''அப்படியானால் இந்த மவன்களுடைய தோல் உரிக்கப் படும். எலும்பு சுக்கு நூறாக்கப்படும். இது தவறாது...'' என்றார் சாம்பய்யா பற்களைக் நறநறவென்று கடித்தவாறு.

மலையின்மீது மழை பெய்தால் திடீரென்று பெருகும் அருவியைப்போல், ஊரில் இருந்த பலபேர்... பெண்களும் ஆண்களுமாக செங்கொடிகளைப் பிடித்துக் கொண்டு வீதிகளுக்கு வந்தார்கள். எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம் தன்னுடைய மகன் மொகிலிதான் உரத்த குரலில் முழக்கமிடுகிறான். பலர் அவனுடைய குரலுக்கு சுருதியாக முழங்குகிற்ார்கள். நரசம்மாவுக்கு அந்த முழக்கங்களாலும், கூச்சல்களாலும் ஏனோ இதயம் படபடத்தது. கால் நடுங்கியது. ஏதோ சொல்ல முடியாத உணர்ச்சி வேகம் அவளுடைய உடம்பினுள் புகுந்து திக்குமுக்காட செய்தது.

www.padippakam.com



சாவித்திரிக்கு உடல் முழுவதும் இரத்த ஓட்டம் அதி கரித்தது. அத்தை இல்லாவிட்டால் அவள் ஓடிப்போய் அந்தக் கூட்டத்தினுள் கலந்து இருப்பாள். சாம்பய்யாவுக்கு மட்டும் ரொம்ப கோபமாக இருந்தது. ஊர்வலம் இதற்குள் முச்சந்திக்கு வந்தது. சாலையில் இருந்த சோற்றில்தான் மக்கள் நின்றுக் கொண்டிருந்தனர்.

இராயலிங்குவின் பெரிய மாட்டு வண்டியின் மீது மொகலி ஏறினான். கிட்டத்தட்ட நேற்றைய பேச்சுகளையே பேசினான் ...நரசம்மா சாலைக்கு வந்து மக்கள் கூட்டத்திற்கு பின்னால் நின்று இருந்தாள். அவளுககு ஒரு பேச்சும் விளங்குவதில்லை. அவள் அந்தப் பேச்சுக்களைக் கேட்கிறாளோ இல்லையோ என்று கூட சொல்ல முடியாது. ஆனால் மொகிலியின் வாய், கண்கள் முகம், கைகள்... எல்லாம் விசித்திரமாக அசைவதை அவள் பார்க்கிறாள்.

மீண்டும் ஊர்வலம் நகர்ந்தது... முன்னேறி சென்றது. ஊரெல்லாம் சுற்றி வந்தது. மீண்டும் முச்சந்தியில் இருந்து ஆற்றை நோக்கிச் சென்றது.

நரசம்மா வீட்டுக்கு வந்தாள்... வாசற்படிக்கு வலது பக்கம் சாம்பய்யா தலையை பிடித்துக் கொண்டு உட்கார்ந் திருந்தார். சாவித்திரி அங்கே நின்றிருந்தாள். அதற்குள் வெயில் புளிய மரத்தின் கிளைகளின் வழியே வந்து வீட்டுவாசலில் விளையாடுகிறது.

''என்னாச்சு. உன் மகன் அரசியல் செய்கிறான் என்று வியப்பா? சிறியவனையாவது கூப்பிடு. இந்த ஆண்டும் நிலம் பொட்டல்தான்... எருதுகளும் புல்லு இல்லாமல் சாகப்போ கிறது'' என்றார்.

நரசம்மாவுக்கு அப்போதுதான் சிறியமகன் நினைவுக்கு வந்தான். அவனைப் பார்க்கவில்லை. அழைத்து வருகிறேன். என்றுப் புறப்பட்டாள். ஆற்றை தாண்டி சாலைக்கு அருகில் இருந்த பேருந்து நிறுத்தத்துக்கு போகும் வழியில ஆங்கே ஆங்கே யுள்ள வேப்ப மரங்களின் கீழே மக்கள் கூட்டம் கூட்டமாக கூடி இருந்தனர். மூன்று ஊர் சனங்களும் ஒன்று கூடியிருந்தனர்... காலய்யா பேசுகிறார். புதிய வகையான பாட்டுகளும், முழக்கங் களும்...

இதற்குள் பேருந்து வந்துவிட்டது. மக்கள் அதனை நெருங்கினார்கள். டயர்களில் இருந்தக் காற்றை பிடுங்கி

www.padippakam.com



விட்டார்கள். எல்லாரும் கீழே இறங்க வேண்டும் என்றார்கள். வந்த லாரிகளையும், டிராக்டர்களையும் நிறுத்தினார்கள். எங்கும் ஒரே சந்தடியாக இருந்தது. அந்த மக்கள் கூட்டத்தில் தன்னுடைய சிறிய மகனைப் பார்க்கமுடியவில்லை தேடினாள்...

''அவங்க பக்கத்தில் உள்ள கிராமங்களில் வேலைகளை, பந்த் செய்ய வைப்பதற்கு போயிருக்கலாம்'' என்ற நீலம்மா சொன்னாள். இப்படியாக நரசம்மா வீட்டை அடைந்தபோது மணி பத்து ஆகி இருந்தது.

மாமனார் வீட்டில் இருந்து மனைவியை அழைக்து கொண்டு வந்த கட்டம்ராஜீலு தன்னுடைய குடிசைக்குள் நுழைந்தார். வெயிலில் இருந்து வந்ததால் கண்கள் இருட்டாக இருந்தது. சற்று நிதானித்து பார்த்தான். சோறு சாப்பிடுகிற அம்மாவைக் கண்டான்.

''இன்னிக்கு நாற்று நட போகலையா அம்மா?'' என்றார்.

''இன்னிக்கு நாற்றுகள் நடவில்லை... அனைத்தும் பந்த்'' என்றாள்.

''பந்தா? அப்பிடியானா நம்மூரிலும் செய்திட்டாங்களா. மாமனார் ஊர்லயும் பந்த்துதான். ஊர்வலத்துக்கு வரச் சொன்னாங்க. எப்பிடியோ தப்பித்துக் கொண்டு வந்து விட்டேன்... பந்த் எப்படி நடக்கிறது'' என்று கூறியவாறே வெளியேறினான்.

''எல்லாம் முடிந்து போச்சு. எல்லாரும் போயிட்டாங்க' யாரையும் எதுவும் சொல்லாதே. எல்லாரும் மிக மகிழ்ச்சியாக இருந்தாங்க''

''இப்போதுதான் வந்துள்ளோம்... போக வேணாம்'' என்றாள் அவனுடைய மனைவி.

''உனக்கு என்னத் தெரியும்?'' என்றவாறு கருங்கல் வீதி வழியே பேருந்து நிறுத்தத்திற்கு வந்தான்.

வேப்ப மரங்களுக்கு கீழே யாரையும் காணவில்லை. தச்சன் வீரய்யா ஒருவன் மட்டும் அதிகமாக குடித்துவிட்டு பயத்துடன் இருந்தான். சாராயக்கடையின் கதவை எப்போது திறந்து விடுவாரோ என்ற கவலையும் அவனுக்கு இருந்தது.

''என்ன வீரண்ணா? இப்படிக் கவலைப்படுகிறாய்'' என்றான் ராஜீலு.

''இந்த கம்யூனிஸ்டு அண்ணலுக்களுக்கு அறிவே இல்லை. பந்த் என்றால் சாராயக்கடையும் பந்தா?'' என்று கோபமாக கேட்டான்.

திடீரென்று ஜீப்பு ஒன்று வந்து நின்றது. திபுதிபுவென்று அதிலிருந்து போலிசாரும், எஸ்.ஐ.யும் குதித்தார்கள்.

''உங்கம்மாள...பிடிடா'' என்று லட்டிகள் கொண்டு அடித்தவாறு ராஜீலுவையும், வீரய்யாவையும் ஜீப்பில் ஏற்றினார்கள்.

''துரையவரே! நாங்க சங்கக்காரர்கள் அல்ல'' வீரய்யா அலறினான்.

''பஸ்களை நிறுத்தினீங்களாம'' மாதச்சோறு... பந்த்தா செய்யீறீங்க போலீஸ் கேம்புகளை அகற்ற வேண்டுமா? சங்கலிய பசங்களா ... போலிசாரின் வீரியத்தைப் பார்த்துக் கொள்ளுங்கடா...'' அடிக்கத் தொடங்கினர்.

''எங்களுக்கு ஒன்றும் தெரியாது துரையவரே! எங்க ஊர்ல அந்த காலய்யாவும், மொகிலியும் தான் செய்தார்கள்'' வீரய்யா வாயிலிருந்து இரத்தம் வருகிறது. அவனை அடிப்பதை நிறுத்தினார்கள். போலிசார் இருவர் வீரய்யாவை ஜீப்பிலிருந்து இறங்கி கைகளை மடக்கிப் பிடித்து ஊருக்குள் கொண்டுபோனார்கள். அதற்கு முன்பே செய்தித் தெரிந்த மக்கள் ஊரிலிருந்து ஓட்டம் பிடித்தார்கள்.

மொகிலி சாப்பிடுகிறான் நரசம்மாவும், சாம்பய்யாவும் அவனைத் திட்டுகிறார்கள். போலிசார் வீட்டுக்குள் நுழைந்து எச்சில் கைகளுடன் மொகிலியை இழுத்துக் கொண்டு போனார்கள். ஏதோ பேசுவதற்கு வந்த ராயலிங்கு, லச்சுமய்யாவையும்... மற்றும் மூவரையும்... வீரய்யா, ராஜீலுவையும் பிடித்துக் கொண்டு தாலுக்காவுக்கு கொண்டு போனார்கள்.

நரசம்மா திகைத்துப் போனாள். சாவித்திரி அழுகிறாள். முழுவதும் கலவரமாய்...... அழுகைகளும், திட்டுகளும்......

மொகிலி சிறையில் இருந்து வீட்டை அடைந்த போது, பயிர்கள் களைப்பறிப்புக்கு வந்திருந்தன. ஊரில் பல சம்பவங்கள் நடந்திருந்தன. புறம்போக்கு நிலங்கள் பன்னிரண்டு ஏக்கரை ஊர் மக்கள் எல்லாரும் சேர்ந்து உழுது, விதைத்து உள்ளனர்... சிறிய சிறிய தகராறுகள் பலவும் நடந்தன... மீண்டும் சில வழக்குகள் மீண்டும் சில தடவைகள் போலிசார் வருவதும், முழக்கங்கள்,

www.padippakam.com



சுவர்களில் சுவரெழுத்துகள், ஊர்வலங்கள், மக்கள் பஞ்சாயத்தின் தீர்ப்புகள்...... இப்படி பற்பல விசயங்கள் நடந்தன எல்லா ஊர்களைப் போலவே இந்த ஊரும் புயற்காற்றில் ஊஞ்சலாடும் மரத்தைப் போல அசைந்துக் கொண்டிருந்தது. மரத்தின் ஒவ்வொரு கிளையும், ஒவ்வொரு இலையும் அசைகிற மாதிரி தான் அந்த ஊரிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் அடித்தளமும் அசைக்கப்பட்டது. ஒவ்வொரு மனிதரும் உலுக்கப்பட்டார்கள்.

இத்தனை மாற்றங்களும் வெளியில் தெரியாத மாற்றங்கள்...... இதற்கு முன்பு விவசாய கூலிகளை தெவிடியா மகனே... தெவிடியா... என்ற திட்டுகளுக்கு பதிலாக, பெயர் சொல்லி பண்ணையார்கள் அழைக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள் ஊர் பண்ணைக்கார்கள் கைகளில் இருந்து மக்கள் கைகளுக்கு வந்து விட்டன. திருமணங்களும், பண்டிகைகளும் ஊர் பண்ணைக்காரர்களின் கண் சாடையில் அல்லாமல், மக்கள்தாமாகாவே கொண்டாடும் நிலை ஏற்பட்டது. இப்படிச் சொல்லப் போனால், எத்தனையோ சொல்லலாம்... ஆடை முறைகளும், வேலை முறைகளும் எல்லாம் அடையாளம் காணமுடியாத அளவிற்கு மாறி இருந்தன.

வானவெளியில் வெள்ளி மேகங்கள் விரைந்து செல்கின்றன மேற்கு வானத்தில் கதிரவன் மறைந்து விடுகிறான். கூரைகளின் மேலே பீர்க்கங்காய் பூக்கள் சிரிக்கின்றன. ஊரெல்லாம் மிகவும் பரப்பரப்பாக உள்ளது. பச்சைப்பயிறு அறுவடைக்கு வந்துள்ளது. சிலர் பச்சைப் பயிறு தானியங்களை அடிக்கும் சத்தங்கள் கேட்கின்றன. பெண்கள் முறங்களுடன் அந்த தானியங்களிலுள்ள புல்லையும் கல்லையும் எடுக்கிறார்கள். ஊரெல்லாம் கிட்டத் தட்ட இந்த வேலையில் மூழ்கி இருந்தது. குழந்தைகள் பச்சைக் காய்களை கொறித்து சாப்பிட்டுக் கொண்டே தாய்மார்களுடன் திரும்புகிறார்கள்.

மொகிலி பெரிய தடியால் வேகமாக பச்சைப் பயிறு காய்களை அடிக்கின்றான். அந்த அடிகளையும், வேகத்தையும் பார்த்து விட்டு, அண்ணி உறவு முறையில் உள்ள லச்சம்மா, ''என்ன பையா...ஜெயிலுக்குப் போய் மிகவும் பலம் பெற்று விட்டாயா'' என்றாள் ''அவனுக்கு ஒன்றும் தெரியாது... பாவம்'' என்றாள் நரசம்மா.

''அதல்ல அத்தை. எப்போதாவது கோபம் வந்து நம்ம சாவித்திரியை அடித்து விடுவானோ என்ற சந்தேகம் தான்'' என்று சிரித்தாள்.

www.padippakam.com



''உன் புருசன் உன்னை அடிக்கிறானா கௌரம்மா?''

''அது ஒன்னும் நடக்காது... சங்கத்திற்கு சொல்லிவிட்டால்...'' லச்சமா. சாவித்திரி தூரத்தில் பச்சைப் பயிரை குவியலாக ஆக்குகிறாள். மொகிலியை அவள் பார்க்கவில்லை. ஆனால் அவனுடைய கைகளில் எவ்ள பலமுள்ளது என்று ஆச்சரியப்படுகிறாள். பயிறுகாயை அடிப்பது மாமூலாய் அல்லாமல்,ஏதோ கோபம் அவனுடைய கைகளில் இருக்கும் போலிருக்கிறது. அவளுக்கு ஓரளவு பயமாகவும் இருந்தது.

அப்பொழுது மொகிலி முகத்தைப் பார்த்தாள். உடலெல்லாம் வியர்வைத் துளிகள். ஆயினும் பைத்தியம் பிடித்தவனைப் போல அடிக்கிறான்.

''நம்ம மகன் வேலை செய்யத் தொடங்கினால் நால்வருக்குச் சமம்'' என்றாள் நரசம்மா. சாம்பய்யா நான்கு கோணிகளை எடுத்து வைத்துக் கொண்டு வாசலில் நின்றிருந்தான். மொகிலி திடீரென அடிப்பதை நிறுத்தினான். தடியை எறிந்து விட்டு, வாசல் வழியே வெளியேறினான். நரசம்மா ஏதோ முணு முணுத்துக் கொண்டே இருக்கிறாள்.

சாவித்திரியின் மனதில் பல சிந்தனைகள் எழுந்தன. சிறையில் இருந்த வந்த நாளில் இருந்து மொகிலி ஏதோ மாதிரியாகத் தான் இருக்கிறான். அது என்னமோ அவளுக்கு விளங்கவில்லை: நரசம்மாவுக்கும், சாம்பய்யாவுக்கும் கூட விளங்கவில்லை. பேச்சை மிகவும் அமைதியாகவும், மென்மையாகவும் பேசுகிறான் திடீரென்று உடனே கோபத்தைக் காட்டுகிறான். சோறு சாப்பிட்டாலும் அதில் கவனம் இருக்கவில்லை. ரொம்ப நேரம் அமைதியாகவும், மௌனமாகவும் இருக்கிறான். அவன் இரவுகளில் பலதடவைகள் எழுந்து படிப்பதையும் எழுதுவதையும் சாவித்திரி கவனித்தாள். அப்பொழுது எப்பொழுதோ தன்னுடைய புருசன் நான்காவதோ, ஐந்தாவதோ படித்தது அவளுக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு கவனமாக படித்ததை அவள் பார்க்கவில்லை. அடிக்கடி அத்தை மாமனாருடன் சண்டைப் போடுகிறான்.

''இவருக்கு என்னாச்சு?'' சாவித்திரிக்கு ஒன்றும் விளங்கவில்லை.

மொகிலி அப்படியே நடந்து முச்சந்தியை அடைந்தான் பனியனை உதறிக்கொண்டான். வேப்ப மரத்தில் பறவைகள் வந்து சேருகின்றன. ராயலிங்குவின் வேலிக்கு மஞ்சள் தெளித்

www.padippakam.com



ததைப் போல பீர்க்கங்காய் பூக்கள் நிறைய பூத்துள்ளன. அப்பொழுது பொழுது மறைந்து போனது. எங்கே போவது என்று சற்றுப் புரியாததைப் போல நின்றான். வேகமாக காலடிகள் எடுத்து வைத்து ஆற்றை நோக்கி நடந்தான். ஆறறில் பால்போன்ற தண்ணீர்...

ஆற்றில் இறங்கி நீந்தினான்... நீரின் மேல்பரப்பில் சிறிய மீன்கள் பறக்கின்றன. சுழி சுழியாய் அலைகள்... கரையேறி பனியனையும், வேட்டியையும் மீண்டும் அணிந்து கொண்டான். நனைந்த மணலில் கைவிரலால் சுத்தியலும், அரிவாளும் வரைந்தான். இருள் கவிழ்ந்தது. சிள் வண்டுகள் ஜோராக சத்தமிடுகின்றன. மேற்கு வானம் சிவப்பு நிறத்தை தெளித்ததைப் போல...

மொகிலிக்கு ஒன்னும் புரிகிறதில்லை. மனமெல்லாம் மரத்து விட்டது. சுழற்காற்றும் தூசியும் எழுந்தது. அதென்ன? ...... எங்கும் தங்குவதற்கு விருப்பமில்லை. கனவில் வாழ்கிறதைப் போன்ற எண்ணம்...... இந்த நிலை எதனால் உண்டாயிற்றோ? மொகிலிக்கு சிறிதும் புரியவில்லை. ஆனால் ஒரு நிமிடம் சும்மா யோசித்தால் போதும்... சிறையில் தன்னைப் போன்று பல கிராமங்களில் இருந்து வந்தவர்களுடைய பேச்சுகள்... அப்பாவின் இருமலும்... எப்போதும் பணம் சாம்பாதிக்க வேண்டும் என்ற அண்ணனின் முகமும்... எல்லாம்... இவை எல்லாம் நினைவுகளுக்கு வருகின்றன.

இந்த நினைவுகள் தனக்கு எதற்கு? எல்லாரையும் போல அவனும் கஷ்டப்பட்டு வாழ்ந்தால் போதும்... குழந்தைகள்... அப்பாவின் இருமல்... போலிசார் அடித்த அடிகள்... எல்லாம் நினைவுக்கு வந்தால் (கம்யூனிஸ்ட்) உழவர் சங்கம் வேண்டவே வேண்டாம் என்று தோன்றுகிறது. கடந்த மூன்று நாட்களாக காலய்யா அவர்கள் லட்சுமி மூலமாக தகவல் தெரிவிக்கிறார் தான் மாத்திரம் தப்பித்துக் கொண்டு திரிகிறான். ஏதோ நிறைய வேலையுள்ளவன் போல நிலங்களுக்குப் போகிறான். அப்பாவுக்கு வயதாகி வருகிறது. அவருக்கு உடலில் சக்தி இல்லை. அண்ணன் சுரங்கவேலைக்குப் போய்விட்டான். தான் சங்கத்திறகு போனால் எப்படி? இப்படி சிறை கிறை என்றால் நிலம் நாசம் தான்நிலம் நினைவுக்கு வந்தவுடனே விரைந்து நிலத்திற்கு சென்றான். வரம்புகளின் மேலே நடந்தான். பக்கத்தில் இருந்தவர்களின் நிலம் நன்றாக வளர்ந்து விளைச்சலுக்கு வந்து இருந்தன. தம்முடையது மட்டும் அப்படி இல்லை. இந்த ஆண்டு விளைச்சல் சூனியம்தான் என்று நினைத்தான்.

ஏரிக்கு அப்பால் குன்றுக்கு கீழே இருந்த வெங்கட ராஜய்யாவின் மாந்தோப்பு தென்பட்டது. அதைப் பார்க்கக்கூடாது என்று நினைத்தான். லட்சுமிச் சொன்ன படியாக...... இன்னும் சற்று நேரம் கழித்தால் அங்கே காலய்யா வந்து விடுவார் தன்னை எதிர்பார்ப்பான். இந்த தடவை தவறாமல் வருவேன் என்று காத்திருப்பார்... இப்படி நினைத்தவாறு... ஆலமரத்தடியில் இருந்து...கொல்லப்பள்ளி கிராமத்தை நோக்கி நடந்தான். சகினாலா அவரின் கொட்டடிகள் பக்கத்தில் உள்ள பனை மரங்கள் ஒரே மாதிரியாக ஒலி எழுப்புகின்றன. அப்பொழுது அவனுக்கு குளிர்காற்று வீசுகிறது என்று தெரிகிறது. உடலின் மேலே உள்ள துணிகள் இன்னும் ஈரமாகவே இருக்கின்றன.

தோட்டத்திற்கு முன்பு உள்ள பாறைமேல் உட்கார்ந்தான் கொட்டடிக்கு உள்ளே எருதுகள் காதுகளையும் வால்களையும் கொசுக்களை விரட்டுவதற்காக வீசிக்கொண்டிருக்கின்றது கண்ணில் பட்டது. பிச்சைக்காரி நாரீ இனிய குரலில் பாடுகிறாள், அந்த பாட்டில துன்பம் இருந்தது. நாரீயின் கணவன் நாடு முழுவதும் அலைந்து எப்போழுதோ ஒரு தடவை வீட்டுக்கு வந்து பத்து நாட்கள் தங்கி, மீண்டும் போகிறான். பிள்ளைகளுடன் அவள் துன்பப்படுகிறாள். அவளுக்கு வயது இருபத்தைந்தைத் தாண்டவில்லை.

சுருட்டு குடித்தவாறே சகினாலா ஓதண்ணா வந்தார். இருட்டில் தன்னுடைய கொட்டடி முன்பு குதிக்கால் போட்டு யாரோ உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ''யார்?'' என்றார்.

''நான் தான் பெரியப்பா'' என்றான் மொகிலி

ஓதண்ணா எரிகிற தீக்குச்சியால் மொகிலி முகம் பார்த்து, ''என்னடா மொகிலி இவள ராத்திரியில் இங்கே உக்கார்ந்திருகிறாய். வீட்டில் தகராறா என்ன?'' என்றார்.

''இல்லை. நிலத்துக்கு போய் வருகிறேன்''

''ஓஹோ அதுவா சங்கதி'' என்றார் ஓதண்ணா. அவருக்கு சங்கம் நினைவுக்கு வந்தது.

''இந்த வழி நல்லதல்ல. அந்த பனை மரங்களில் உக்காரக் கூடாது'' என்றார் ஓதண்ணா.

மொகிலி அது அல்ல என்று சொல்ல விரும்பினான். ஆனால் நாரீயின் பாட்டு கேட்க இடம் இருக்காது. அந்தப் பாட்டைக் கேட்பதற்காகவே அவன் அங்கே அமர்ந்தான். பாடல் நின்று விட்டது.எவரோ தொடர்ந்து விக்கி விக்கி அழுகிறதைப் போல

www.padippakam.com



மொகிலி எழுந்து தெருவில் சற்று தூரம் நடந்தான் திடீரென பின்னால் திரும்பி வெங்கட ராஜய்யா தோட்டத்தை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினான். அப்பொழுது பெரியதாக பெருமூச்சு விட்டான். மக்காச்சோளம் பயிரிலிருந்து காற்று வீசுகிறது. இலைகள் அசைவது மிகவும் அழகாக இருந்தது.

அப்படி வெளியேறிய பிறகு, மொகிலி சரியாக ஒருவாரம் கழித்து வீட்டுக்கு வந்தான். அப்போது உணவருந்தும் நேரம். அவனுடைய முகம் வாடி இருந்தது. துணிகள அழுக்காக மாறி இருந்தது. தாடி வளர்ந்திருந்தது.

எதிரில் நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்கிற மொகிலியின் அண்ணன் சந்திரய்யா அதிர்ச்சியுடன் உக்கார்ந்து இருந்தான். அம்மா நரசம்மா கன்னத்தில் கைவைத்துக் கொண்டு உக்கார்ந்து இருந்தாள். சாம்பய்யா ஏதோ செய்கிறார்.

''இதோ இதுதான் பாகவதம். தம்பியை என்ன செய்திடுவாயோ உன் இஷ்டம். அவன் கைக்கு வராம அலைகிறான் மருமகளும் நானும் வெயில்ல பறவைகளைப் போல வாடிப் போயி உள்ளங்கைகளில் இரத்தம் வருமாறு வேலை செய்கிறோம்... உங்க அப்பா இருமல் இருந்தாலும் ஏர் பிடிக்கிறார் மத்த எல்லாரும் உழத்தொடங்கிவிட்டார்கள். வேலை செய்யாட்டி மண்ணைத்தான் நாங்க சாப்பிடணம்'' நரசம்மா வாய் திறந்து கடகடவென்று ஒப்புவித்தாள்.

இந்த பேச்சுகள் ஒன்றையும் கவனிக்காமல் வீட்டின் பின் புறம் நடந்தான். சாவித்திரி கொட்டடியில் சாணியை எடுக்கிறாள்... மொகிலியைப் பார்த்ததும் அவளுக்கு சொல்லமுடியாத மகிழ்ச்சி உண்டாயிற்று. அருகில் வந்து, ''இத்தனை நாட்கள் எங்கே போயிட்டீங்க... கொஞ்சம் சொல்லிவிட்டுப் போகக் கூடாது?'' என்று கேட்க வேண்டும் என நினைத்தாள். தன் புருசனுடன் பேசினால் அத்தை என்ன நினைப்பாளோ என்ற வெட்கத்தினால் சும்மா இருந்தாள்.

முகத்திற்கு நீரைத் தெளித்துக் கொண்டு வீட்டிற்குள் புகுந்தான்.

''எனக்கு சாவு ஒன்னுதான் வரவில்லை. இந்த குடுத்தனம் பாழாய் போகட்டும்'' சந்திரய்யாவின் குரல் நடுங்கியது.

''உன் அதிஷ்டம் அப்படி இருக்கிறதுடா மகனே'' நரசம்மா பெருமூச்சு விட்டவாறு கூறினாள்.

அம்மாவுக்கு அண்ணன் என்றால் எதற்கு அவ்வளவு அன்பு என்று மொகிலிக்குப் புரிந்தது. அந்த பணத்தில் காடு கரைகள் வாங்கணும் என்ற ஆசை...

மொகிலி எதுவும் பேசாமல் வீட்டில் தனக்காக கட்டப் பட்ட துவரை தடுக்குகள் உள்ள அறையில் நுழைந்து கட்டிலில் சாய்ந்தான். பத்து நிமிடங்களுக்குள் அவன் குறட்டை விட்டான். பிறகு சாவித்திரி வந்து அவனை எழுப்ப முயன்றாள். எவ்வளவு எழுப்பினாலும் அவன் எழவில்லை. என்ன செய்வது என்றும் அறியாமல்,சோற்றைத் தட்டில் வைத்துவிட்டு அத்தையுடன் நிலத் திற்குச் சென்றாள்.

''காலய்யாவுக்கு சூடு சுரணை இல்லை. தன்னுடைய பிள்ளைகளையும், மனைவியையும் வுட்டுட்டு திரிகிறான். ஊர்ல இருக்கிற பசங்களை எல்லாம் கெடுக்கிறான். போலிஸ் காரங்க ளுக்கு மூளையே இல்லை. இந்த ஒன்னும் தெரியாத பசங்களை பிடித்துக்கொண்டு போறாங்க. ஆனால் அந்த காலய்யாவை இதுவரையில் பிடிக்கலை. பாழும் காலமிது. பசங்களும் முன் னைப் போன்ற பசங்களா இல்லை. கூலிக்காரர்களும், பறையர் களும் மாறிப் போயிட்டாங்க. கூலிக்காரப் பெண்கள் பொட்டு வைத்துக் கொள்வதும், தலையைச் சிங்காரித்துக் கொள் வதும் என்று நாகரீகமாகி விட்டார்கள் எனக்கு சாவு சீக்கிரம் வரமாட்டேன்ங்குது... எங்க அம்மா இந்த கிராமத்தில என்னைக் கட்டிக் கொடுத்தாள். அன்னிலிருந்து வயிறு நிறையச் சாப்பிட்ட தில்ல. நிம்மதியாகத் தூங்கின நாள் இல்லை. எலும்புகள் துருத் திக் கொண்டு வெளுப்பாக போனது. இரத்தம் சுண்டிப் போச்சு. வயிறு கர்ப்பமாச்சு... எல்லாம் நரசம்மா அதிஷ்டம்... இன்னா அதிஷ்டம்? மகன்கள் எருதுகள் போல வளந்துட்டாங்க. அம்மா! இனிமேல் உனக்கு கஷ்டம் இருக்காது என்று ஒருவரும் சொன்ன தில்லை. இந்த மண்ணில் மாடாய் உழைச்சு நாசமாகும் காலம் வந்து விட்டது.'' நிலத்தில் வேலை செய்தவாறு நரசம்மா இப்படி புலம்பிக் கொண்டிருந்தாள். வெயிலில் களைத்துப் போனாள். அவளுடைய பேச்சுகளை யாரும் கேட்கவில்லை. சாவித்திரிக்கு ஒன்றும் புரியவில்லை.

''இந்த காலத்துப் பெண்களும் இருக்கிறாங்களே. புருச னுங்க சோறு விழுங்காதபடி செய்யிறாங்க! யன் மருமகள்களும் இருக்காளுங்களே.உங்க அம்மா இவ்வளவு கஷ்டப்படுறாங்களே... என்னய்யா உனக்கு இது முறைதானா ஊரெல்லாம் சுத்த விரும் பினா என்னை எதுக்கய்யா கட்டிக் கொண்டாய். இப்படி செய்தால் நான் சும்மா இருக்கமாட்டேன் என்கிறாங்களா...

www.padippakam.com



அத்தை இருக்கிறாள் அல்லவா... நாயாட்டம் குரைக்கிறதுக்கு. யாரை சொல்லி யன்ன குத்தம்? நான் பிறந்த வேளை சரியில்லை. எல்லாம் என் தலையெழுத்து'' என்றவாறு மூக்கில் ஒழுகிய வியர்வையில் நனைந்த குங்குமத்தை வழித்தாள். கிணத்தங் கரையில் உள்ள மரத்தடியில் வந்து பெய்த மேகததைப் போல அவள் முகத்துக்கு குறுக்காக புடவைத் தலைப்பை வைத்துக் கொண்டுஅழத் தொடங்கினாள்.

அப்பொழுது பொழுது சாய்ந்து போயிருந்தது. தாலுக்கா வில் செட்டியாருக்கு சோளங்களை அளந்துவிட்டு சாம்பய்யா முகமெல்லாம் வாடிப்போக வந்தார்.

''விளையற நிலங்களில் அழாதே... உன் அழுகைதான் முன்னுக்கு வருது. சோளம் விளைஞ்சு ஒரு மாசம் ஆயிடிச்சு அந்த செட்டியார் தெவிடியா மகனுக்கு சாவு வரலைய்யே... அவன் கேட்டபோது கொடுத்துவிட்டிருந்தால் சரியாக இருந் திருக்கும். விலை இறங்கி விட்டது என்று சரியாக மூட்டைக்கு இருபது ரூபாய் குறைத்து விட்டான். சும்மாவே இருநூறுரூபாய் இப்படி போய்விட்டது'' சாம்பய்யா தன்னுடைய கோபத்தை எல்லாம் காட்டினார்.

சாவித்திரி என்ன என்று சொல்லுவாள். அவளுக்கு இதெல் லாம் பெரிய பிரச்சனையாக இருந்தது. தன்னுடைய புருசன் புத்திசாலி என்றும், படித்தவன் என்றும் தெரியும். உழுகிற போதும், தனிமையில் உள்ள போதும் தனது கணவன் நன்றாகப் பாடுவதும் தெரியும். மக்கள் கூட்டத்தில் பறையை அடித்துக் கொண்டு வலது கையை அசைத்த வண்ணம் அன்றைக்கு முச்சந்தி யில் பாடியது இப்போதும் கண்ணில் தெரிகிறது. தன்னுடைய தோழிகள் தன் கணவனைப் பாராட்டுவதும் தெரியும். இவை எல்லாம் ஒரு பக்கம்...... மற்றொரு பக்கம் அத்தை மாமனாரின் திட்டுகள்... எது உண்மை. தன்னுடைய கணவன் செய்கின்ற குற்றம்தான் என்ன? வேலை செய்துக் கொண்டு வாழனும். சிறு வயதில் இருந்து தனது தாய் தந்தைகள் !சொன்னப் பேச்சு, அதாவது... தாய் தந்தையர்க்கும், கட்டிக் கொண்டவளுக்கும் பெயர் எடுத்துக் கொண்டு வரணும்... என்ற !பேச்சு நினைவுக்கு வந்தது. என்ன பெயர்? அத்தை எப்பொழுதும் தன்னைத் திட்டு வது எதற்கு? பெற்றத் தாயின் பேச்சை கவனிக்காதவன் எப்படி தன் பேச்சை மட்டும் கவனிப்பான்? அவள், ''வேணாம்... அத்தைக்கும் மாமனாருக்கும் கோபம் மூட்டாதே'' என்று மொகிலிடம் சொல்ல முடியுமா? இருப்பினும் சிறையிலிருந்து

அவன் திரும்பி வந்தபோது எருது கொட்டடியில் பயந்து பயந்து பார்த்தாள்.

''நான் உங்கள் மனதை நோக செய்கிறேனா?'' அவள் திக்கு முக்காடினாள்.

மொகிலி சிரித்து, ''உண்மைதான் சாவித்திரி. நான் என்ன செய்வது? முதுகெலும்பற்ற மண்புழு மாதிரி வாழ்ந்தால் அப்பாவுக்கும் அம்மாவுக்கு நன்றாக பிடிக்கும். காலத்தின் போக்கோ வேறு மாதிரியாக இருக்கிறது. அதோ பார் சாவித்திரி!'' என்றான்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். அவன் மனைவியின் தோள் மேல் கைவைத்துக் காட்டினான். ஐக்கய்யாவின் புறக்கடையில் உள்ள மரம் காற்றில் அசைகின்றது. அந்த மரத்தடியில் போசம்மா தேவதை இருக்கிறாள்,

''அந்த மரத்தில் ஒரு இலையாவது அசையாது இருக்கிறதா பார்''

''காற்று எவ்வாறு வருகிறது?''

''சாவித்திரி! இந்த புதிய காற்று நம்மையும் அசைக்காமல் விடாது... எனக்கு எப்படி சொல்வது என்று தெரியவில்லை''

''என்னமோ அய்யா... நீங்கள் போய்விட்டால் எனது துயரம் தீர வழியே இல்லை''

''எனக்கு யாரையும் மனம் நோக வைக்கணும் என்ற எண்ணம் இல்லை. ஆனால் எனக்கு மட்டும் ஏதோ பைத்தியம் பிடித்ததைப்போல இருக்கிறது'' என்றான்.

இந்த பேச்சுகள் எல்லாம் சாவித்திரி நினைவுக்கு வந்தன. அவள் சிந்திக்கத் தொடங்கினாள். அவன் முன்பு போல சாப்பிடுவது இல்லை. சாப்பிட்டுக் கொண்டே தட்டில் ரேகைகள் வரைகிறான். பேசிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று பேச்சை நிறுத்தி விடுகிறான். போட்ட சோற்றை சாப்பிடாமலே கையைக் கழுவுகிறான். இதற்கு முன்பு தாய் திட்டினால் தானும் திட்டி இருப்பான். இதற்கு முன்பு கோபம் வந்தால் கையில் எது இருந்தாலும், அதை தூக்கி எறிவான். இப்பொழுது யார் என்ன சொன்னாலும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறானேத் தவிர, கோபப்படுவது இல்லை. இன்னும் அதிகமாகப் போனால் அந்த இடத்தை விட்டு எழுந்து போய் விடுவான்.

www.padippakam.com



ஏனோ மொகிலியைக் குறித்து அவளுக்குப் பல விசயங்கள் தெரியாமல் போகிறது. ஏழு நாட்கள் எங்கு போயிருந்தான். உணவு அருந்தினானோ? இல்லையோ? கட்டிலுக்குப் பக்கத்தில் சோற்றை வைத்து விட்டு வந்தேன். எழுந்திருந்தாரோ இல்லையோ? கறி வைத்தேனா?'' சாவித்திரி இவ்வாறாகச் சிந்தித் துக் கொண்டு இருநதாள்.

அவள் மண்வெட்டியை திருப்பிப் பிடித்து மண்ணாங்கட்டி களை உடைக்கிறாள். அவள் முகம் வெயிலால் சிவந்தது. அவள் நெற்றிக் குங்குமம் வியர்வையில் கரைந்து போனது. கைகள் வலிக் கின்றன. முழங்கால் வரையில் வெயிலினால் வெளுப்பான கோடு கள் காணப்பட்டன. உள்ளங்கை கொப்புளத்தில் இருந்து இரத்தம் வருகின்றது. மாலை ஆவதற்கு முன்பே அத்தையும் மருமகளும் மண்வெட்டிகளைத் தோளில் வைத்துக் கொண்டு. தண்ணீர் தவளைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு வீட்டிற் குப் புறப்பட்டார்கள். மாலைத் தென்றல் சுகமாக வீசியது. வழியில் உள்ள வேப்ப மரங்களிலும், இதர மரங்களிலும் இருந்த காடை குருவிகள் குர்ரு... குர்ரு என்று சத்தம் இடுகின்றன... பிச்சைக்காரன் எல்லய்யா தூரத்தில் நடக்கிறான். பாதங்களின் கீழே மெத்தென்று இருக்கும் மண் பாதைக்கு இரு புறங்களிலும் புற்களும், பூக்களும் மஞ்சள் நிறத்தில்...

ஊர் நெருங்குகிறது. ''பதுகம்மா'' ஆடிக் கொண்டு இளம் பெண்கள் பாடுகிறார்கள். சாவித்திரிக்கு இதுவரையில் நினை விற்கு வரவில்லை... தசரா பண்டிகை வந்துவிட்டதென்று உடனே அவளுக்கு விவரிக்க இயலாத அளவிற்கு துக்கம் வந்தது. இதுவரையில் அவளைப் பண்டிகைக்காக பிறந்த வீட்டிற்கு அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை.அண்ணனோ, அப்பாவோ தன்னை ஒரு மாதம் வரைக்கும் அழைத்துச் சென்றால் நன்றாக இருக்கும் என்று அவள் சிந்தித்தாள்.

மஞ்சள் நிறத்தில் பீர்க்கம் பூக்கள் மலர்ந்திருந்தன. இரு வரும் வீட்டை அடைவதற்கு முன்னால் சாவித்திரியின் பெரிய மாமனார் வீடு வந்தது. அவர்கள் இவர்களை விட சிறிது வசதி யானவர்கள். சிறுவர்கள் யாரோ இருக்கிறார்கள். சாவித்திரி எட்டிப் பார்த்தாள். பெரிய அத்தானுடைய மகன்கள் போல தென்பட்டார்கள்.

''தங்கச்சி சௌக்கியமா?'' குள்ளமாக இருந்த ஒருவன் வாசலுக்கு வந்து கேட்டான். நரசம்மா முகத்தை ஏதோ மாதிரி வைதது்க் கொண்டு செல்கிறாள்.

www.padippakam.com



''சின்ன அத்தை சௌக்கியமா?'' என்றாள் அவள் ''ஆம் சௌக்கியம் தான்'' என்றவாறே நிற்காமல் தன்னுடைய வீட்டுக்கு சென்றாள்.

பங்காளிகளுடைய சண்டைகள் எல்லாம் பல ஆண்டுகளாய் இருந்து வருகின்றன. அந்த விசயம் சாவித்திரிக்கு தெரியும். ஆனாலும், ''நீங்க எல்லாரும் சௌக்கியமா யக்கா? மாமா வந்துட்டாரா?'' என்றாள்.

''ஆமாம். எல்லாரும் வந்துட்டோம். பிள்ளைகளுக்கும் தசரா விடுமுறைதான். அதனால்தான்......'' என்றாள்.

சாவித்திரி அக்காளுடைய உடலைக் கூர்ந்து கவனித்தாள். நகரங்களில் இருப்பவர்கள் புடவைக் கட்டிக் கொண்டால் பரவாயில்ல. ஆனால், நிலத்தில் வேலை செய்யும் போது புடவையை தார்பாச்சியாக மடித்து கோவணமாக கட்டிக் கொள்ள வேண்டி உள்ளது என்று நினைத்தாள்.

''சாவித்திரி வா.வா நிறைய வேலை இருக்கு'' அத்தை கூப்பிட்டாள்.

இந்தக் குடும்பம் என்றால் நரசம்மாவுங்கு கோபம்... அதிலும் முக்கியமாக இந்த மாநிற பெண்ணைக் கண்டால் இன்னும் கோபம். மற்றபடி அந்தப் பெண் பேச்சிலிருந்து பார்த்தால் அவள் நல்லவள் தான். ஆனால் அவள் கீழ்சாதியை சேர்ந்தவள் என்பதாலும், அவளுடைய கல்யாணம் பார்ப்பனன் இல்லாமல் மேளதாளங்கள் இன்றி நடந்தது என்பதாலும், ஒரு ரூபாயும் வரதட்சணையாக கொண்டுவரலை என்பதாலும், தம்முடைய வம்சத்தில் இதைப் போன்ற கல்யாணமே நடந்தது இல்லை என்பதாலும் நரசம்மாவிற்கு கோபம். மாமா எங்கே என்ன வேலை பார்க்கிறார் என்று சாவித்திரிக்குத் தெரியாது. அவரை முதல் தடவையாக பார்த்த போதே அவர் நல்லவர் என்று நினைத்துக் கொண்டாள்.

இந்த விசயங்களை எல்லாம் விட்டு விட்டு, வீட்டிற்கு வந்தால் வீடு முழுவதும் சந்தைக் கடையாக இருந்தது. மொகிலி இல்லை. சாப்பிட்ட தட்டை கழுவி வைத்திருந்தார். தட்டை கழுவி வைத்ததற்கு சாவித்திரி கவலைப்பட்டாள். கொஞ்சமும் நிற்காமல்,புடவை தலைப்பை இடுப்பில் செருகிக் கொண்டுவிட்டு வேலையில் ஈடுபட்டாள்.

எருது கொட்டடியில் மாமன் சந்திரய்யாவும் மாமனாரும் ஏதோ மெதுவாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

www.padippakam.com



மொகிலி வேட்டியை மடித்துக் கட்டினான். சட்டை அழுக்கில்லாமல் இருந்தது. தாடி வைத்துக் கொண்டான். கழுத்தில் துண்டை சுற்றிக் கொண்டான். இப்படி அவன் வீட்டில் அடியெடுத்து வைத்தவுடன் வியப்படைந்தான்.

கட்டிலின் மேல் போர்வை இருந்தது. அதன் மீது பெரியப்பாவின் மகன் லட்சுமிநாராயணன் உட்கார்ந்து இருந்தார்... அவர் மீது மொகிலிக்கு நல்ல மரியாதை... அவருக்கு பக்கத்தில் தன்னுடைய அண்ணன் சந்திரய்யா அமர்ந்திருந்தான். பக்கத்துக் கட்டிலில் கழுத்து வரையில் கம்பளியைப் போர்த்திக் கொண்டு சாம்பய்யா படுத்திருந்தார். அவருக்கு காய்ச்சல். அந்த காய்ச்சல் அன்று மாலையில் வந்தது. அந்த கட்டிலுக்குச் சிறிது இடது புறமாக அமர்ந்திருந்த நரசம்மா லட்சுமிநாராயணாவை நோக்கிப் பார்த்தாள். இடது கையில் மூக்குப்பொடி டப்பி இருந்தது. தட்டி மறைவில் சாவித்திரி நின்றுகொண்டு இருந்தாள்.

மொகிலி வந்தவுடனே, அவர்களுடைய பேச்சுகள் நின்று போய் விட்டது. தன்னை குறித்தே இவர்கள் எல்லாரும் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று அவனுக்குப் புரிந்தது. தனக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் கூட அம்மா, தனக்கு அண்ணன் என்றால் விருப்பம் என்று, லட்சுமிநாராயணாவை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள் என்றும் மொகிலிக்குப் புரிந்தது.

''மொகிலி! இப்படி வந்து உக்காருடா?'' லட்சுமி நாராயணன் எப்போது வந்தீங்கன்னா?'' அவன் அமைதியாக ஒரு சிறு கட்டிலை நிமிர்த்தி உட்கார்ந்தான்.

''மதியம்'' லட்சுமிநாராயணா சிறிது நேரம் அந்தப் பேச்சும் இந்தப் பேச்சும் ஆனபிறகு லட்சுமிநாராயணா ஹரிக்கேன் விளக்கை எடுத்து முன்னால் வைத்தான்.

''ஏம்ப்பா மொகிலி!'' லட்சுமி நாராயணாவின் குரல் மிருதுவாக உள்ளது. ''நம்ம அப்பாக்கள் நிலத்தைப் பிரிக்கும் போது ஒவ்வொருவருக்கும் ஒரு குடம் நெல் விளையும் அளவிற்கு நிலம் கிடைத்தது. அதுவும் கூட கல்லும் முள்ளையும் தவிர ஒன்றும் விளையாத பூமி. அதில் இரத்தம் சிந்தியும்... எலும்புகள் ஒடியவும் வியர்வைத் துளிகள் கொட்டியும் உழைத்ததால், இன்னிக்கு நாம கொஞ்சம் வயிற்றுக்கு உண்ணுகிறோம். சித்தியும் சித்தப்பாவுக்கு ஒரு யானையைப் போல உதவி செய்தாள். இப்போது அவங்களுக்கு வயசாயிடிச்சு. உடம்பில தெம்பும் இல்லை.

ஏதோ நீ கஷ்டப்பட்டு உழைச்சாதான் உண்டு. அவங்களை ஏண்டா இப்படி அழவைக்கிறாய்'' என்றார்.

''கண்ணா கொஞ்சம் நல்லபடியாய் எடுத்து சொல்லுப்பா. செத்தப் பிறகு உன் வயித்துல பிள்ளையாய்ப் பிறக்கிறேன். எவள காலம் கஷ்டப்படுறது மகனே!... உங்க அப்பா நாலும்தெரிந்த வர். அதனால உங்கம்மாவிற்கு கஷ்டம் இல்லை. சாப்பிட்டும் சாப்பிடாமலும் பிள்ளைகள் பெண்கள் என்று வளர்த்தேன். ஒரு நல்ல துணி உண்டா? எல்லாத்தையும் பிள்ளைகளுக்காக கொடுத் தேன். இப்போது என்னால் முடியாது. உங்க சித்தப்பாவைப் பார் கட்டிலில் படுத்திருக்காரு. இருமல் எரிமலையாய் உள்ளது. ஆனாலும் ஏர் பிடிக்காவிட்டால் ஏதும் நடக்காது.''

நடுவில் சாம்பய்யா முணகியவாறு, ''நிறுத்துடீ உன் வாயினால தான் அவன் மண்ணாங்கட்டியாக மாறுகிறான்'' என்றார்.

''உன் வாயில கொள்ளி வைக்க. எல்லாரும் என்னையே குறை சொல்லுங்க'' நரசம்மா மூக்கை சிந்தினாள்.

சந்திரய்யா, ''நீங்க ஒன்னும் பேசாதீங்க... அண்ணன் முன்னால சொல்லுடா! கழனிவேலை செய்கிறாயா? இப்படியே அலைகிறாயா? உம்மீது நம்பிக்கை வைத்திருந்தால் நாசம் தான். அன்னிக்கு சிறைக்குப் போனாய். ஓடி ஓடி ஆயிரத்து ஐந்நூறு ரூபா செலவு செஞ்சேன்'' என்றார்.

''உனக்குத் தெரியாமல் இருந்தால் வாய் மூடிக் கொண்டு இருப்பது நல்லது. நீ சுரங்கத்தில் இருக்கிறாய். அதனால் பணம் தட்டுப்படுகிறது. அந்தப் பணத்தை தவிர உனக்கு ஒண்ணும் தெரியாது. என்னை திட்டினால் பரவாயில்லை ஆனா...'' மொகிலியின் முகம் சிவந்தது.

சிறிது நேரம் அவரவா அவரவருடைய கஷ்டங்களைச் சொல்லிக் கொண்டார்கள். தீவிரமான குரல்களில் ஆரம்பித்து அழுகையுடன் முடித்தார்கள். எல்லாரும் மொகிலிதான் காரணம் என்று தான் பேசினார்கள். சாம்பய்யா, மொகிலியினாலே கோமுட்டி செட்டி சோளத்திற்கு ஒரு நூற்றம்பது ரூபாய் குறை வாகக் கொடுத்தான் என்று கூறினார். இப்படிப்பட்டவன் கல்யாணம் ஏன் பண்ணிக் கொண்டான் என்று கேட்டார். இவன் சன்னியாசியாய் போவது நிச்சயம் என்றார். சின்ன சித்தப்பா வைப் போல ஊர் ஊராக அலைந்து அலைந்துபைத்தியம் பிடித்து எதற்கும் பயன்படாமல் செத்துப் போயிடுவான் என்றார்.

www.padippakam.com



லட்சுமிநாராயண மட்டும் எல்லாரும் பேசிய பிறகு...

''சித்தி! இதெல்லாம் உங்க ஒரு குடும்பத்தின் தகராறு என்று நினைத்துக் கொண்டீங்களா? மனுசன் இயல்பாகவே கெட்டவன் இல்லை... இந்த கஷ்டங்கள் எல்லாம் எல்லா ஊரிலும் எல்லாக் குடும்பங்களிலும் நடக்கிறது. இந்த உலகம் முழுவதும் எரிமலையாக உள்ளுக்குள் எரிந்து கொண்டு இருக்கிறது. நம்மசந்திரய்யா ஊரை விட்டு நிலக்கரிச்சுரங்க வேலைக்கு ஏன் போனான். அதற்கு மொகிலியா காரணம்? குடும்பம் பெரியதாயிடுச்சு. செலவும் அதிகரித்து விட்டது. அதற்கு தகுந்தாற் போல வருமானம் பெருகவில்லை. வருமானத்தை பெருக்குவதற்கு போதுமான நிலம் இல்லை... அதனால் நிலக்கரி சுரங்க வேலை சம்பளத்தில் இருந்து நிலத்தை வாங்கலாம் என்பதுச் சந்திரய்யாவின் எண்ணம். ஆமாம் சந்திரய்யா! நீ மூணு வருடத்தில் எவ்வள சம்பாதித்திருக்காய்? திடகாத்திரமானவனாக இருந்தவன் நீ இப்போது எப்படி மெலிந்துப் போய் எலும்புக்கூடு போல் ஆயிட்டாய். உன் பெண்டாட்டியை ஆஸ்பிட்டலுக்கு எடுத்துக் கொண்டு திரிகிறாய். மொகிலி அப்படி அல்ல. போராட்டம் செய்து வெற்றி அடைவேன் என்றுக் கூறுகிறான். ஆமாண்டா மொகிலி! சாம்பய்யா அப்பா உன்னாலதான் கோமுட்டிசெட்டி சோள விலையைக் குறைத்து விட்டான் என்று சொல்கிறார். எப்போதாவது சரி... நாம் விளைவித்த விளைச்சலுக்குத் தகுந்த விலை கொடுத்திருக்கிறார்களா? அதனால் இவை எல்லாவற்றிலும் மூலக்காரணம் எங்கேயோ? அதைத் தேடுவதில்தான் இந்த போராட்டம் எல்லாம்'' லட்சுமி நாராயணா பெருமூச்சு விட்டு, தான் எங்கேயோ வழிதவறிப்போய் விட்டதாக நினைத்து, ''சித்தி! அவனுக்கு யோசிக்கின்ற வயது வந்துள்ளது. எல்லாவற்றையும் விட முக்கியமாக பெண்டாட்டி வந்துள்ளாள். நீங்க அவனை திட்டக்கூடாது. யப்பா மொகிலி! இவங்க நம்ம அம்மாடா! தன்னுடைய சோத்தை உனக்கு கொடுத்துவிட்டு பட்டினி கிடந்த தாயிடா. உன் மூத்திரத்தையும், பீயையும் கழுவி உன்னை வளர்த்த தாய் அவள். எல்லாம் தெரிந்தவன் நீ கொஞ்சம் நிதானமாக இருக்கணும்'' என்றார்.

''நம்ம பையனும் உதவாக்கரையல்ல. அவனும் கஷ்டப் படறான். எனக்கு பலமில்லை. மொகிலி வேலை செய்ய தொடங்கினால் நாலு பேருக்கு சமமாக செய்வான் உனக்கும் தெரியும். குடிப்பதும், சில்லறை வேலைகளும் செய்ய மாட்டான். வேண்டாம் மொகிலீ! காலம் கெட்டுப்போய் இருக்கிறது. நீ செய்யிறது நல்லதே. ஆனா...'' சாம்பய்யாவிற்கு பேச்சு தடுமாறியது.

www.padippakam.com



''எனக்கு இவையெல்லாம் தெரிந்தும் பைத்தியம் மாதிரி புத்தி பேதலிக்கிறது அண்ணா'' மொகிலி இரண்டு கைகளாலும் முகத்தை பொத்திக் கொண்டு அழத்தொடங்கினான்.

எதற்காகவோ, ''வேணாம்டா தம்பீ'' என்று சந்திரய்யாவும் அழுதார். நரசம்மா தன்னுடைய பிள்ளைகளுக்கு துன்பங்களை உண்டாக்குகின்ற இந்த மோசமான உலகத்தை திட்டிக்கொண்டே அவளும் குமுறி அழத் தொடங்கினாள்.

சாவித்திரிக்கும் துக்கம்தொண்டையை அடைத்தது. அவள் குமுறிக் குமுறி அழுதாள்.

''புயல் காற்றுக்கு தாய்மரத்தின் வேரும் அசைகிறது. இலைகளும் கூட அசைகின்றன'' லட்சுமிநாராயணா வேதனை தாங்காமல் முணகியவாறே எழுந்து சென்றார். அவரின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தன. சாம்பய்யா மாத்திரம் அழாமல் இருந்தார். அவர் உறைந்துப் போயிருந்தார். நினைவு தெரியாத வயதில் காலரா வந்து அவருடைய தந்தை இறந்து போய் விட்டார். அண்ணனுக்கு அப்போது வயது பத்து. அந்தக் கால கஷ்டங்களை எதிர்க்கொண்டு சமாளித்து குடும்பத்தைப் பராமரித்தான். தன்னுடைய அண்ணனுடைய உருவத்தை சாம்பய்யா இந்த லட்சுமிநாராயணாவில் பார்த்தான்.

இரவு சாப்பிட எழுந்தார்கள். இப்பொழுதெல்லாம் அனைவரும் சேர்ந்துச் சாப்பிட்ட நாட்களே இல்லை. நரசம்மா பரிமாறினாள். சாம்பய்யா தான் பயிரிடப் போகும் பயிர்களைப் பற்றியும், நிலம் வாங்கியதைக் குறித்தும் பேசினார். அவர் எவ்வளவு ஏழ்மைத்தனத்திலிருந்து வந்தாரோ அதைக் கூறினார் அனைவரும் பேசினார்கள். மொகிலி மட்டும் அனைவருடைய முகங்களில் மின்னும் மகிழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு சாப்பிட்டான். குடா குடா என்று இடி முழக்கம் செய்து மழை பெய்து, உடனே மேகங்கள் எல்லாம் விலகிப் போய் வானம் தெளிவாக மாறி விட்டதைப் போலிருந்தது.

அனைவரும் உணவருந்தி முடிந்தபோது இரவு வெகு நேரமாகி இருந்தது. மொகிலி வெளியில் வந்தான். காற்று சில்லென்று வீசியது. மரங்கள் கல கல கல சத்தம் செய்தவாரே அம்மன் ஆவேசம் வந்தால் ஆடுபவர்களைப் போல் ஆடுகின்றன. மின்சார ஒயர்கள் காற்றில் விந்தையான சப்தம் போடுகின்றன. இது வரையில் மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரங்களை போர்த்திய வண்ணம் மேகத்திரை நழுவிச் செல்கிறது. சாம்பய்யா மொகிலி

www.padippakam.com



பின்னால் நின்றவாறு, ''மழை வரும் போல் இருக்கிறது'' என்றார்.

மொகிலி அந்த காற்றிலேயே கொட்டடியை நோக்கி நடந்தான். மாட்டுக் கொட்டடி, கூரையாதலால் அது காற்றில் ஊசலாடுகிறது. அதிவேகமாக உய்ய் என்று வீசும் காற்றில் ஐக்கய்யாவின் புறக்கடையில் உள்ள ஆலமர இலைகள் போடும் சப்தத்தைக் கேட்டவாறு உட்கார்ந்திருந்தான். அது ராயலிங்குவின் மகளான பைத்தியக்காரி ராயக்கா அழுகிறதைப் போலிருந்தது.

மொகிலி எவ்வளவு நேரம் அவ்வாறு அமர்ந்திருந்தானோ தெரியாது. கதவு திறந்தே இருந்தது. வீட்டில் அனைவரும் களைத்துப் போய் தூங்குகிறார்கள். தனக்காக கட்டிய துவரை தடுக்குகளாலான அறையினுள் சென்றான். மிகவும் களைத்துப் போய் உணர்வின்றிச் சாவித்திரிப் படுத்திருந்தாள். சாவித்திரிக்கு விழிப்பு வராமல் கதவை மூடி விட்டு பக்கத்தில் படுத்துக்கொண்டான். அரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் சாவித்திரி முகத்தை... வெயிலுக்கு வாடிப்போயிருந்த முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வெளியே இன்னமும் காற்றானது முழக்கம் இட்டவாறே இருந்தது. புளிய மரத்து இலைகள் மிக வேடிக்கையாக காற்றினால் அசைகின்றன.

மொகிலிக்கு தூக்கம் வரவில்லை. வெங்கடராசய்யாவின் மாந்தோப்பு— அந்த தோப்பில் காலய்யாவின் பேச்சுகள்— தன்னைப் போலவே வந்திருந்த மற்றவர்கள்—தான் இது வரையில் எப்பொழுதும் பார்த்திராத பெரிய பெரிய கண்களை உடைய பெரியவருடைய பேச்சுகள்... அடிக்கடி... கண்களை மூடினாலும் திறந்தாலும்... நினைவூட்டின.

இரவு எவ்வளவு நேரமாயிற்றோ? பாவம். சாவித்திரி... வாழ்வெல்லாம்கஷ்டத்தைத் தவிர சுகத்தை அறியாத அம்மா... அம்மாவைப்போன்ற வாழ்வை அனுபவிக்கின்ற அப்பா... வயல் வரப்புகளை வாங்க வேண்டும் என்ற சிந்தனைகளுடன் நிலக்கரி சுரங்க வேலைக்குப் போய்விட்ட அண்ணன்... வீடு, குடும்பம், வெயில், மழை, குளிர், மாடுகள், நிலம், விளைச்சல், அனைத்தும் கலந்த வாழ்க்கையும்...

அவன் எங்கே போய்க் கொண்டு இருக்கிறான்? இந்த நிலத் திற்கே பயணத்தை ஆரம்பிக்கிறான். மொகிலி ஓசை

www.padippakam.com



எழுப்பாதவாறு எழுந்தான். தன்னுடைய துணிமணிகளை கட்டிக் கொண்டான். கதவைத் திறந்தான். மழை மெல்லியதாக ஆரம்ப மானது. காற்று இன்னமும் பலமாக வீசுகிறது. வாசலுக்கு வந்து மறுபடியும் பின்னால் திரும்பி பார்த்து, தலை குனிந்துக்கொண்டு விரைவில் காற்றிலும் இருட்டிலும் மறைந்து விட்டான்.

மழை பெரியதாக மாறியது... காற்று நின்றுவிட்டது. □

தெலுங்கில் இருந்து தமிழில்: **டாக்டர் நலிமலா பாஸ்கர்.**
நன்றி : **சுருஜனா** (புரட்சிகர எழுத்தாளர் சங்கத்தின் இதழ்)

---

# மக்கள் கலை மன்ற பாடல்

உடைத்தெறி தடை தகர்த்தெறி
கிழித்தெறி இருள் அழித்தொழி
கண்ணில் தெரியுது புது ஒளி
கைகளில் ஏந்து ஜெயக்கொடி
இன்னுமா நெஞ்சிலே கேள்விக்குறி
நக்சல்பாரிகள் ஒரே வழி
(உடைத்தெறி)

ரேமான்ஸ் குவாலியர் அலங்காரம்
நெய்தவன் கந்தலில் அவமானம்
மட்டனும் சிக்கனும் நாவூறும்
பட்டினிச் சாவேன் தினந்தோறும்
பொறுத்தது போதும் இதுகாறும்...
பொங்கிடு! புது நிலை உருவாகும்
(உடைத்தெறி)

பர்மா தேக்கில் தாழ்வாரம்
கட்ட உழைத்தவன் ப்ளாட்பாரம்
கழுத்தை நெரிக்கிது அதிகாரம்
கலைப்போம் அவர்களின் அரிதாரம்
கண்களில் ஓடைபோல் நீர்க் கோலம்
பூண்டு எழுவோம் போர்க் கோலம்
(உடைத்தெறி)

துவக்குகள் நமக்கா தடாத் தடை
தூசியாய் நினையதை துடைத்துடை
வேரை இழக்குது கூலிப்படை
வெல்லும் நிச்சயம் மக்கள்படை!

○ **லட்சுமணன்**
**கோவை.**

www.padippakam.com

## பறை முழக்கம்

ம.ப.பே. தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம், திராவிடர் கழகம், அன்னை ரமாபாய் மகளிர் மன்றம் ஆகிய அமைப்புகள் இணைந்து வடஆற்காடு மாவட்டத்தில் ஆபாச எதிர்ப்பு இயக்கக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுப் பிரச்சாரம் செய்யப் பட்டது. சென்னையில் ம.ப.பே., த.பெ.க., ஆகிய இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் இணைந்து ஆபாச எதிர்ப்பு இயக்க கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு துண்டறிக்கைப் போடப்பட்டது.

ஆபாச எதிர்ப்பு இயக்கக் கூட்டமைப்பு சார்பில் 10-9-96 அன்று ஆபாசத்தை எதிர்த்து சட்டமன்றத்தில் துண்டறிக்கை வீசிப் போராட் டம் செய்த த.பெ.க-தின் பெண்களைப் பாராட்டி கூட்டம் வடபழனி யில் நடைபெற்றது. இதில் தோழர்கள் குமரன் (ம.ப.பே), மக்கள் கவிஞர் இன்குலாப், குமார் (ம.க.இ.க.), தேன்மொழி (மகளிர் எழுச்சி மன்றம்), லட்சுமி (த.பெ.க), கலா (த.பெ.க) ஆகியோர் பேசினார். 23-9-96 அன்று இக்கூட்டமைப்பு சார்பில் சென்னை மாவட்ட ஆட்சி யாளர் அலுவலகம் முன்பு த.பெ.க-தின் பெண்கள் மீது தமிழக அரசு ஏவியுள்ள அடக்கு முறையைக் கண்டித்தும், அழகிப் போட்டிகளைத் தடை செய்யக்கோரியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அசோக் (ம.ப.பே), நடராசன் (ம.ப.பே), சூரியா (த.பெ.க), லட்சுமி (த.பெ.க), தேன்மொழி (மகளிர் எழுச்சி மன்றம்) ஆகியோர் உரையாற்றினார்கள். இறுதியில் மாவட்ட ஆட்சியாளரிடம் கூட்டமைப்புச் சார்பில் விண் ணப்ப மனு அளிக்கப்பட்டது.

## நினைவில் நிறுத்த வேண்டிய நாள்கள்

| | |
|---|---|
| மாபெரும் சோவியத் புரட்சி நாள் | அக்டோபர் 17 |
| இந்திய இராணுவம் 1947-ல் காஷ்மீரை ஆக்கிரமித்த நாள் | அக்டோபர் 27 |
| 1984-ஆம் ஆண்டில் சீக்கியர் படுகொலை செய்யப்பட்ட நாள் | நவம்பர் 1 |
| போபாலில் விஷவாயுவை அமெரிக்க கம்பெனி செலுத்தி மக்களைப் படுகொலை செய்த நாள் | டிசம்பர் 3 |
| பாபர் மசூதி 1992-இல் இந்து பாசிஸ்டுகளால் இடிக்கப்பட்ட நாள் | டிசம்பர் 6 |
| மனித உரிமைகள் நாள் | டிசம்பர் 10 |
| இந்தி ஆதிக்கப் போர் தியாகிகள் நாள் | டிசம்பர் 25 |
| தோழர் மாவோ பிறந்த நாள் | டிசம்பர் 26 |

www.padippakam.com

## சிறப்புமிகு AILRC கலைநிகழ்ச்சி




## வண்ணமிகு கலை ஊர்வலம்



படிப்பகம்